விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 30 புதன்கிழமை (14.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 207

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபராக இமெல்டா நேற்றுப் பதவியேற்றார்

### அரச சேவையிலிருந்து கணேஷ் ஓய்வு


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக திருமதி இமெல்டா சுகுமார் நேற்றுப் பிற்பகல் 2.20 மணிக்குப் பதவியைப் பொறுப்பேற்றார்.

இதுவரை யாழ்.அரச அதிபராகக் கடமையாற்றிய க.கணேஷ் நேற்றுடன் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் யாழ்.மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய க.கணேஷ் கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இதனையடுத்துப் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் யாழ்.மாவட்ட அரச அதிபராக முல்லைத்தீவு அரச அதிபராகக் கடமையாற் (18 ஆம் பக்கம் பார்க்க)



# வடக்கில் நிரந்தர இராணுவ முகாம் அமைக்கும் பணிகள் தொடரும்!

## பாதுகாப்புச் செயலர் திட்டவட்டம்

(கிளிநொச்சி)

வடக்கில் நிரந்தர இராணுவ முகாம்களை அமைக்கும் பணி தொடரும் எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். வடக்குக்கு நேற்று விஜயம் செய்த அவர் இராணுவத்தினர் மத்தியில் உரை நிகழ்த்தும் போதே இதனைக் கூறினார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## கணேஷை முன் மாதிரியாகக் கொண்டு பொது நிர்வாகத்தை முன்னெடுப்பேன்

### யாழ்.அரச அதிபர் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் கணேஷ் அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு யாழ்.மாவட்ட பொது நிர்வாகத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பேன் என யாழ்.அரச அதிபராகப் பொறுப்பேற்ற திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபராக நேற்றுக் கடமையைப் பொறுப்பேற்ற பின் மாவட்ட செயலக பிரிவுத் தலைவர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 28 வருடங்களாக அரச சேவையில் உள்ளேன். அரச அதிபர் கணேஷ் அவர்கள் 50 வருடங்கள் சேவையில் இருந்துள்ளார்.

அவர் எனக்கு ஒரு முன்மாதிரியாக-குருவாகவுள்ளார். கடந்த 8 ஆண்டுகளாக நான் முல்லைத்தீவு அரச அதிபராகக் கடமையாற்றியுள்ளேன். (17 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனின் இல்லத்தில் அமைச்சரவைக் கூட்டம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இல்லத்தில் அமைச்சரவைக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

30 ஆண்டுகளின் பின்னர் அரசாங்கத்தின் உயர் மட்டக் குழுவினர் முதல்தடவையாகக் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பணிமனையாகச் செயற்பட்ட இக் கட்டடத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு-5)

## தர்சிகாவின் மரணம் குறித்து விசாரிக்கக் கோரி

## சுகாதார சேவைகள் பணிமனை முன் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை வைத்தியசாலையில் குடும்ப நல உத்தியோகத்தராகக் கடமையாற்றிய சரவணை தர்சிகாவின் மர்ம மரணம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி நேற்று யாழ்.சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட குடும்பநல உத்தியோகத்தர்கள் சங்கம், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் என்பன இணைந்து இவ் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தன.

இவர்களின் ஆர்ப்பாட்டத்தினையடுத்து பொதுச் சுகாதார பிராந்திய பணிப்பாளர் பணிமனையின் செயற்பாடுகள் முற்றாக முடக்கப்பட்டன. பணியாளர்கள் அனைவரும் வீதியோரமாகக் காத்திருந்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்த குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் உரையாடச் சென்ற பிராந்திய சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையில் கடும் வாக்குவாதங்கள் (18 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு தமிழ்நாட்டில் பாதுகாப்பு அதிகரிப்பு

### தாக்குதல் அச்சமாம்

(கொழும்பு)

இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு உச்ச அளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மீது தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதாகவும் இதனால் சென்னையில் காணப்படும் இலங்கைத் துணை உயர்ஸ்தானிகராலயம் மூடப்பட வேண்டும் எனத் தமிழ் அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

எவ்வாறெனி (18 ஆம் பக்கம் பார்க்க)

## டாக்டர் பிரியந்த செனவிரட்னவை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

### மரண விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கவும் பணிப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணை அரசினர் வைத்தியசாலையில் கடமையில் இருந்த இளம் குடும்பநல உத்தியோகத்தரின் மரணம் தொடர்பாகச் சந்தேகிக்கப்படும் அவ் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் பிரியந்த செனவிரத்னவைக் கைது செய்து இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் ஆர்.வசந்தசேனன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

வேலணை அரசினர் ஸ்வத்தியசாலையில் கடந்த 10 ஆம் திகதி கடமையில் இருந்த இளம் குடும்பநல உத்தியோகத்தர் சரவணை தர்சிகா வைத்தியசாலை விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இச் சம்பவம் (18 ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை லெட்சுமணராஜா

**(நாச்சிமார் கோவிலடி)**

641/1, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை லெட்சுமணராஜா நேற்றுமுன்தினம் (12.07.2010) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐசே. சின்னத்துரை–இராசம்மா தம்பதியரின் புத்திரனும், மனோன்மணிதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற தாமோதரம் பிள்ளை நல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சின்னத்தங்கம் (மகேஸ்வரி), ராஜகோபால், மகேஸ்வரி (கனகம்மா) பாலச்சந்திரன், புலேந்திரன், தவமணிதேவி, வரதராஜா ஆகியோரின் சகோதரனும் சசிகலாதேவி (லண்டன்), சந்திரகுமார் (அமெரிக்கா), சற்குணராஜன் (பௌதிகவியல் ஆசிரியர் யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), சந்திரசேகரன், சசிகரன் (கனடா), சசிரேகா (அபிவிருத்தி உதவியாளர் யா/தேசிய கல்வியியற்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவநீதராஜா (லண்டன்), அகிலா (அமெரிக்கா), ரஜனி, லதா (கனடா), வாசவன் (பிரபல ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும் நளாஜினி (லண்டன்), தாட்சாயினி (லண்டன்), பிரணவன், குமரன் (அமெரிக்கா), வினோஜ், வசீகரன், விதுஷ் (கனடா), மிஜங்கன், விணுக்ஷன், சஞ்ஜீவினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.07.2010) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 1014, வெரியபுலம் ம.வி. முன்,
கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி.

தகவல்:
**குடும்பத்தினர்**

(1856)

---

மகேஸ்வரி நிதியத்தில் மணல் பெறுவதற்காக பணம் செலுத்துவோர் தமக்குரிய மணல் கிடைக்கும் திகதிகளை அவர்கள் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கத்தின் அடிப்படையில் (ப.இல) தெரிந்து கொள்ள முடியும்.

**19 th July 2010**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2960 | 2040 | 3171 | 3293 | 1792 | 4018 |
| 2426 | 2382 | 4313 | 3137 | 1808 | 3152 |
| 2332 | 3986 | 3945 | 3231 | 3350 | 3283 |
| 2751 | 3980 | 3037 | 3683 | 3728 | 1852 |
| 2777 | 3901 | 3202 | 3787 | 3323 | 4159 |
| 2695 | 2768 | 3315 | 3302 | 4026 | 3291 |
| 2570 | 2792 | 3110 | 3217 | 3883 | 3694 |
| 2403 | 2868 | 3690 | 4862 | 3372 | 3694 |
| 2774 | 2444 | 2984 | 3329 | 3668 | 3193 |
| 2727 | 4224 | 3392 | 4194 | 5033 | 4697 |
| 3979 | 4317 | 3865 | 4404 | 5038 | |
| 2396 | 3956 | 3081 | 4014 | 5037 | |
| 2576 | 7661 | 3766 | 3681 | 1361 | |
| 2541 | 3178 | 3837 | 3823 | 3601 | |
| 2857 | 3025 | 3633 | 4377 | 3804 | |

குறித்த தினத்தன்று குறிப்பிட்ட பற்றுச் சீட்டுக்குரிய பயனாளிக்கு மணல் கிடைக்க தவறும் பட்சத்தில் உடனடியாக 021-2226837 என்னும் இலக்கத்திற்கு அலுவலக நாட்களில் மாலை 3.30 தொடக்கம் 5.00 மணிவரை முறையிடவும்.

தம்பித்துரை றஜீவ்
செயற்றிட்ட இணைப்பாளர்

(C-647)

---


**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச தர கற்கை நெறிகளுக்கும், அனைத்து விசா ஆலோசனைகளுக்குமான நிறுவனம்

**IELTS** (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)

We guarantee minimum band 6.0 Upwards

**Spoken English with Grammar**

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினைத் தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

IELTS, Spoken English ஆகிய பாடநெறிகள் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றது.

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Audio & Video Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

To Study in UK(London), Canada, Australia, Newzealand.
Hot.... Hot courses for easy Student visa are open now

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

- இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் தொடர்வதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913

திகதி 17.07.2010 / 18.07.2010 / 20.07.2010 — காலை : 10.00 மணி, மாலை : 04.00 மணி

(C-644)


---

# கும்பாபிஷேகம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாவிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10.20 மணிக்கு வரும் கன்னி இலக்கின குரு ஹோரையில் வரும் சுபமுகூர்த்தத்தில் இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேகக் கிரியைகளை தேவஸ்தான பாலஸ்தாபன பிரதம குரு பிரதிஷ்டா வித்தகர் பிரதிஷ்டா சிரோமணி ஸ்ரீவிஷ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தாச்சார்யார் நிகழ்த்திவைப்பார்.

(ச-3)

---


# கார் விற்பனைக்கு

H.W.SANTRO மினி CAR A/C

விற்பனைக்குண்டு.

தொடர்பு: 2222063

(1855)


---

# வல்வை அபிவிருத்திக்கான செயற்குழு

**VALVAI DEVELOPMENT ACTON GROUP (V.D.A.G) IT CENTER - திறப்பு விழா**

வல்வை மக்களின் ஆரோக்கியமானதும் கௌரவமானதுமான சமுதாயத்தை நோக்கி ....

பல சாதனைகளையும் வேதனைகளையும் சுமந்த வல்வெட்டித்துறை மண் இன்று உள்ள நிலைமையை எண்ணிப்பார்ப்போம் !

நாம் இப்படியே வாளா இருந்திடலாமா? எம் முன்னோர் சாதித்தவற்றை மீண்டும் இளம் சந்ததியினராகிய நாம் ஏன் சாதிக்கக்கூடாது?

புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழும் வல்வை மக்கள் முடிந்தளவில் எம் சக்தி எல்லாவற்றையும் ஒன்றிணைத்து மீள் வலுப்பெறுமாறு உந்திய வண்ணமுள்ளனர்.

எம் உறவுகளையும் உன்னத சக்திகளையும் ஒன்றிணைக்க தொடர்பாடல் மிக இன்றியமையாதது. எனவே இவ்வொருங்கிணைப்பினை முன்னெடுத்து செல்ல மேற்படி IT CENTRE (உலகளாவிய தொடர்பாடல் நிலையம்) ஆரம்பிக்கப்படுகிறது.

இடம் - தெணி வீதி ,வல்வெட்டித்துறை
காலம் - 15.07.2010 (வியாழக்கிழமை)
நேரம் - காலை 09.00 மணி

நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ - வல்வை அபிவிருத்திக்கான செயற்குழு

---

# மணல் விநியோகத்திற்கு மேலதிக பாரவூர்திகளைப் பயன்படுத்துதல்

மணல் விநியோகத்திற்கு மேலதிக வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதால் பாரவூர்தி சங்கங்களில் பதியப்பட்டதும் இராணுவ அனுமதி பெறப்பட்டதுமான வாகனங்களில் இதுவரை சேவையில் ஈடுபடாததுமான பாரவூர்தி உரிமையாளர்கள் இன்று (14.07.2010) காலை 10.00 மணிக்கு இல.110, 4ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள மகேஸ்வரி நிதியத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தம்பித்துரை றஜீவ்
செயற்றிட்ட இணைப்பாளர்
மகேஸ்வரி நிதியம்

(C-646)

---


# விற்பனைக்கு

இல. 96 காதி அபூபக்கர் வீதியில் அமைந்துள்ள 2 கடைகளும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்
இல.33 கண்ணபுரம்
யாழ்ப்பாணம்.
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்

T.P : 0773317904
0776559683

(1843)


---


28.06.2010 முதல்

அருண் விஜய், பிரபு, கார்த்திக், விஜயகுமார் மற்றும் பலர் நடிப்பில்




செல்லா சினிமா (நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

(C-588)


---

# University of Jaffna-Sri Lanka Faculty of Arts

## FIRST EXAMINATION IN FINE ARTS & ARTS 2009 FIRST SEMESTER

### Postponement of Examination
### Course Units: English and Social Harmony

The examinations for above course units which are scheduled to be held on 17th July 2010 is postponed to 24th July 2010 (Saturday) due to Mahapola Ceremony. There is no change in the timetable for 18th July 2010.

Candidates are requested to note the change of date.

Registrar

University of Jaffna
Jaffna
2010.07.13

(C-642)

# இன்று ஒரு தகவல்

## மதியத்தூக்கம்

என்னுடைய நண்பர் ஒருத்தர் மத்தியானம் சாப்பிட்டு முடிந்ததும் அப்படி சாய்ந்து விடுவார்.

பொதுவாகவே எல்லோரும் அப்படித்தான். கொஞ்சம் தூங்கி எழுந்தால் அதற்குப்பின் உடம்பும் கொஞ்சம் கலகலப்பாக இருக்கும்.

அறிவியல் ஆய்வுகள் என்ன சொல்கிறது தெரியுமா? இரவுத் தூக்கத்தின் நடுப்பகுதியில் இருந்து 12 மணிநேரம் கழித்து உடம்பு மிகவும் சோர்வடைந்து உறக்கத்தை தேடுகிறது.

ஒரு 15 நிமிடம் தூக்கம் கிடைத்து விட்டால் உடம்பு மறுபடியும் இலேசாகி விடும். கடுமையான உழைப்புக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் நீண்ட தூக்கங்களை விட இது போன்ற குட்டித் தூக்கங்களுக்கு மதிப்பு அதிகம். என்று சொல்கிறது.

நெப்போலியன் குதிரைச்சவாரியில் இருக்கும் போதே தூங்குவது வழக்கம்.

அதனால் தான் அவனுக்கு அந்தப் பெயர் வந்ததாக சில பேர் சொல்வார்கள் .

ஆனால் உண்மை அதுவல்ல. Knappian என்பது ஒரு பழைய ஆங்கில வார்த்தை.

அதிலிருந்து வந்து தான் நெப் என்ற விபரம் தெரிந்தவர்கள் சொல்வார்கள்.

மிகப் பெரிய பொறுப்பில் இருந்தவர்களெல்லாம் மதியம் தூங்கி எழும்புவது உண்டாம். வின்ஸ்டன் சேர்ச்சில் மதியம் மூன்று மணிக்கு தூங்க ஆரம்பித்தால் ஆறு மணிக்கு விழிப்பாராம்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஜெர்மனியர்கள் லண்டனில் குண்டு போட்டார்கள் அல்லவா அப்பொழுது இவனுடைய தூக்கம் கலைந்திருக்கிறது.

உயிரியல் வல்லுநர் மிருகக்காட்சிச் சாலையிலுள்ள மனிதக் குரங்குகளை ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார்கள். அவையெல்லாம் மத்தியான நேரத்தில் தூங்குமாம். விடியற் காலையில் புத்துணர்ச்சியோடு இருக்குமாம்.

பரிணாம கொள்கையின் படி மனிதர்களுக்கும் அது தொடர்ந்து வந்திருக்கிறது.

குட்டித் தூக்கத்திற்குப் பின் சூடான பானங்கள் சாப் பிட்டால் விசாலப் பார்வை கிடைக்குமாம் கோப்பி, தேநீர்ப் பழக்கம் இல்லாதவர்கள் எலுமிச்சைச் சாறு அருந்தலாமாம்.

தூங்கி எழுந்தவுடன் இசையைக் கேட்பதோ அல்லது புத்தகத்தை வாசிப்பதோ நல்லதில்லையாம். அதுமேலும் தூக்கத்தை கிளறுமாம்.

சாப்பிட்டவுடன் அப்படியே தூங்குவதை விட மூன்று குவளை தண்ணீர் குடித்து விட்டுப் படுத்தால் நல்லதாம் விரைவாக சமிபாடு அடையுமாம்.

இந்த மதியத் தூக்கம் இயற்கைக்குப் புறம்பானதல்ல. இது நல்லதற்தகுத் தான் என்று அது சம்பந்தமான நிபுணர்களெல்லாம் சொல்கிறார்கள். மதியத்தூக்கம் மாதிரியே பயணத்தூக்கமும் ஒருவகை.

பேருந்தில் உட்கார்ந்தவுடனேயே சிலர் தூங்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஒருத்தர் டாக்டரைத் தேடி வந்து கேட்டார்: "ஏன் டாக்கடர் ? பஸ்ஸில் உட்கார்ந்து போகும் போது தூங்குவது தப்பா?" என்று கேட்டார்.

" அது ஒன்றும் தப்பில்லையே " என்றார் டாக்டர் .

"அதற்கு ஏன் என்னை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள்?" என்றார் அவர்.

"நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள்?" என்றார் டாக்டர்.

"பஸ்ஸில் டிரைவர் உத்தியோகம் பார்க்கிறேன்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலை மாணவர்களுக்கான சித்திர, கவிதைப் போட்டி முடிவுகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் பன்மைத்துவக் கலாசாரம் ஊடாகச் சமாதானம் என்னும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட சித்திரம் மற்றும் கவிதைப் போட்டிகளில்வலயமட்டரீதியாகமுதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களின் விபரம் வலயக் கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் விபரம் வருமாறு,

சித்திரப்போட்டி (சுவரொட்டி)

பிரிவு1

க.கம்சன்(யா/மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை), தி. அஸ்மிதா(யா/பரு.சித்திவிநா. வித்தி செ.ஜெ.ஜெலன்ரினா (யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலை)

பிரிவு 2

ச.சிந்துசன் (யா/ஹாட்லிக் கல்லூரி), ப.பிரவின் (யா/நெல்லியடி ம.ம.வித்தி), செ.பிரதீபன் (யா/நாகர்கோயில் மகா.வித்தி)

பிரிவு 3

ச.விதுர்ஷா (யா/நெல்லியடி ம.ம.வித்தி), க.ரகுகரன் (யா/பரு. சித்தி.வி.வித்தி), சி.கஜந் (யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலை)

பிரிவு 4

யோ.பகீரதன் (யா/ஹாட்லிக் கல்லூரி), பி.தினேஸ் (யா/நெல்லியடி ம.ம.வித்தி,

பிரிவு 5

வே.சோபிதா (யா/வடஇந்து மகளிர் கல்லூரி), மு.அபிராம் (யா/நெல்லியடி ம.ம.வித்தி

கவிதைப்போட்டி

பிரிவு 1

த.பிரிந்தா(யா/குடத்தனை அ.த.க.பாடசாலை), வி.சாலினி(யா/கரணவாய் மகா.வித்தி, செ.தயாளினி (யா/வல்வை சிவகுரு.வித்தி)

பிரிவு 2

இ.சுபாசினி(யா/வல்வை சிவகுரு. வித்தி, ம.அக்ஷாலினி (யா/தேவரையாளி இந்துக்கல்லூரி), ஆ.சரஞ்சிகா (யா/நாகர்கோயில் ம.வித்தி)

பிரிவு 3

செ.சுகாங்கி (யா/விக்கினேஸ்வராக்கல்லூரி), ம.தமிழரசன் (யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை), இ.ரஜிதா (யா/ குடத்தனை அ.மி.த.க.பாடசாலை)

பிரிவு 4

சி.சிவசேகரன் (யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை), ம.இலக்கியா (யா/விக்கினேஸ்வராக்கல்லூரி), அ.கயல்விழி (யா/வடஇந்து மகளிர் கல்லூரி) (4-19)

# வலி.தென்மேற்கு பிரதேச சபையால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேச சபையினால் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதற்கமைய உத்தியோகத்தர்கள் ஊழியர்களாலும் பொது அமைப்புக்களாலும் அலுவலகங்கள் பொது இடங்களில் சிரமதானம் செய்யப்பட்டு வருவதுடன் திண்மக் கழிவுகளும் கிரமமாக அகற்றப்பட்டு வருகின்றது. பிரதேசசபையால் எரிபொருள் வழங்கப்பட்டு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் புகையூட்டல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாரி காலம் நெருங்குவதால் நுளம்புப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை எல்லைக் குட்பட்ட தனியாருக்கு சொந்தமான ஆதனங்கள் அனைத்தினதும் பற்றைகள், புதர்கள் என்பவற்றை வெட்டி துப்பரவு செய்து பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் ஆதனச் சொந்தக்காரர்கள் உள்ளூரில் இல்லாதவிடத்து பராமரிப்பவர்கள் அவற்றைத் துப்புரவு செய்தல் வேண்டும் எனவும் துப்புரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத காணிகள் சபையால் துப்புரவு செய்யப்பட்டு அவை பிரதேச சபையின் ஆதனமாக பராதீனப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (6-4)

# இராசி பலன்

14.07.2010
(ஆனி 30, புதன்கிழமை)
திருதியை மாலை 6.56 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 12.43 மணிவரை
இராகுகாலம் 12.00-1.30 மணிவரை
சுபநேரம் 4.30-6.00 மணிவரை
நீர்வேலி வாய்க்காற்றரவைப்பிள்ளையார் கொடியேற்றம், மாணிக்கவாசகர் குருபூசை.

| | |
|---|---|
| மேடம் | அஜீரண ரோகம் , காரியதாமதம், தனவிரயம், குடும்பக் கவலை. |
| இடபம் | தன்னம்பிக்கைக் குறைவு , ரோக நிலை , உறவினர் சந்திப்பு , தெய்வசிந்தை. |
| மிதுனம் | இஷ்ட சித்தி , மனோதைரியம் , நற்கீர்த்தி , போசன சுகம். |
| கடகம் | மனோ சங்கடம் , போசன சுகக் குறைவு , முயற்சி தாமதம் , அதிக செலவு. |
| சிங்கம் | வெகுமானம் , நல்ல முயற்சி , நண்பர்கள் சந்திப்பு , போசன சுகம். |
| கன்னி | காரிய அலைச்சல் , வீண்பகை , சோம்பல் நிலை , உறவினர் சந்திப்பு. |
| துலாம் | முயற்சி கைகூடும் , பொருள் சேர்க்கை , தன்னம்பிக்கை , கலந்துரையாடல். |
| விருச்சிகம் | அதிகாரம் , நற்பெயர் , தொழிலில் ஆர்வம் , முயற்சி கைகூடும். |
| தனுசு | கட்டுப்பாடு , பிரயாணம் , பெரியோர் மனஸ்தாபம் , முயற்சி தாமதம். |
| மகரம் | அபகீர்த்தி , முயற்சி தாமதம் , போசன சுகம் , வாகன பயம். |
| கும்பம் | களஸ்திர நன்மை , காரிய அனுகூலம் , பொருள் சேர்க்கை , நல்ல செய்தி. |
| மீனம் | தொழில் நன்மை , முயற்சி கைகூடும் , பொருள் சேர்க்கை , தேகநலன் |

வளவன்

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்ட இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலி-கிழக்கு பிரதேச சனசமூக நிலையங்களின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி வார நிகழ்வின் முக்கிய செயற்பாடாக இரத்ததானம் வழங்கும் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய வலி-கிழக்கு பிரதேச சபையின் ஐந்து உப அலுவலகங்களின் பிரிவிலும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது.


இதன் பிரகாரம் இன்று புதன் கிழமை வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும் நாளை வியாழக்கிழமை வலி-கிழக்கு பிரதேச சபையிலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நீர்வேலி உப அலுவலகத்திலும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் உப அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

எனவே அனைவரும் இந்நிகழ்வில் பங்கு கொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு சமாச செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (6-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா . | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 55 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 120-160 | 130 | 140 |
| தக்காளி | 70 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 60 | 70 | 70 |
| கரட் | 120-140 | 120 | 140 |
| பூசணி | 45 | 40 | 140 |
| புடோல் | 40 | 50 | 30 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 85 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 130 |
| வெண்டிக்காய் | 40 | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 |
| பயற்றங்காய் | 80 | 90 | 70 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 80 | 70 | 60 |
| கறிமிளகாய் | 100 | 90 | 130 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 160 |
| போஞ்சி | 80 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 90 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |



யாழ்.சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்செல்லும் சிவகணேச சுந்தரனுக்கான பாராட்டுவிழா நிகழ்வில் ஆசிரியர் கழகத் தலைவர் சி.கௌரிதரன் உரையாற்றுவதையும் விழா நாயகனை மாணவர்கள் மாலை அணிவித்து கௌரவிப்பதையும் வித்தியாலய அதிபர் திருமதி கு.மலர்விழி விழாநாயகன் தம்பதியருக்கு வாழ்த்துப்பா வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகம் நடத்தும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு எதிர் வரும் 17,18,19 ஆம் திகதிகளில் இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 17ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.30 மணிமுதல் 11 மணி வரை கணக்கியல் பாடக் கருத்தரங்கை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரை யாளர் கலாநிதி ரி. வேல்நம்பியும் பௌதிகவியல் பாடக் கருத்தரங்கை யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் துறைத்தலைவர் கலாநிதி எஸ்.சிவயோகனும் நிகழ்த்தவுள்ளனர். காலை 11.30 மணிமுதல் 1.30 மணிவரை வணிகக்கல்வி பாடக்கருத்தரங்கை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம் ,இரசாயனவியல் பாடக்கருத் தரங்கை யாழ். பல்கலைக்கழக இரசாயன வியல்துறைத் தலைவர் கலாநிதி வி.ஸ்ரீகரன் ஆகியோர் நடத்தப்படவுள்ளனர்.

மேலும் மாலை 3.30 மணிமுதல் 5.30 மணிவரை அரசறிவியல் பாடக்கருத்தரங் கை சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் மு.அசோக் நடத்தவுள்ளார்.


மேலும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் 11 மணி வரை பொருளியல் பாடக்கருத்தரங்கை யாழ். பல் கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ் .உதயகுமார் , இணைந்த கணிதம் பாடக்கருத்தரங்கை யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபர வியல் துறை தலைவர் கலாநிதி எஸ். ஸ்ரீ சற்குணராசா ஆகியோரும் காலை 11.30 மணி முதல் 1.30 மணிவரை இந்து நாகரி கம் பாடக் கருத்தரங்கை யாழ். பல்கலைக் கழக பேராசிரியர் கலைவாணி இராமநாதன் , உயிரியல் பாடக்கருத்தரங்கை யாழ். பல் கலைக்கழக விலங்கியல் துறை தலைவர் திருமதி கௌரி ராஜன் ஆகியோரும் நடத்த வுள்ளனர்.

மேலும் நண்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை புவியியல் பாடக்கருத்தரங்கை ஆசிரியர் பி.எஸ்.குமரன்,இரசாயனவியல் பாடக்கருத்தரங்கை யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ்.மகேஸ்வரர் ஆகியோரும் நடத்தவுள்ளனர்.

19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் 11 மணிவரை தமிழ்ப்பாடக் கருத்தரங்கை பிரபல ஆசிரியரும் அரசறிவி யல் பாடக் கருத்தரங்கை யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் மு.அசோக் ஆகி யோர் நடத்தவுள்ளனர். (6-4)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிட மாகவும் கொண்ட ப.க.மகா தேவா கல்கிசை மஜிஸ்திரேட் நீதி மன்ற நீதிவான் ருச்சிர வெலிவத்த முன்னிலையில் சமாதான நீதி வானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஓய்வு நிலைப் தபால் அதிபரான இவர் நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் நிறுவுனராகவும் அம் மன்றத்தின் தலைவ ராகவும் செயலாளராகவும் இருந்ததோடு தற்போது உப தலைவராகவும் இருந்து வரு கின்றார். சமூக சேவையாளராகிய இவர் நயினாதீவு சமூகப் பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திக் சங்கத்தின் நிறை வேற்றுக்குழு உறுப்பினராகவும் இருந்து வருகின்றார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினராய் இருப்பதோடு வெள்ள வத்தை இந்து சமய கலை கலாசார வளர்ச் சிப் பணி மன்றத்தின் உப செயலாளராகவும் இருந்து வரும் இவர் நயினை வரகவி நாகமணிப்புலவரின் நயினை மான்மியம் என்னும் நூலையும் பதிப்பித்து வெளியிட் டுள்ளார். (ந)

யாழ்.செய்திகள்

# நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்கான திரைப்படக்காட்சிகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த.உயர் தரத்தில் நாடகமும் அரங்கிய லும் பாடத்தைப் பயில்கின்ற மாணவர்களின் நன்மை கருதி அவர்களது பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நாடகப் பாடங்களை அடிப்படையாகக்கொண்ட 3 திரைப்படங்கள் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை 3 நாட்களுக்கு இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத் தில் அகலத்திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

மூன்று நாட்களும் காலை 9.30 மணிக்கு திரைப்படக் காட்சிகள் ஆரம்பமாகும். இதன் போது, உலகப் புகழ் பெற்ற நாடக ஆசிரியர் களின் நாடகங்களான சோபோகிளிஸின் அன்ரிக்கனி ,ஹென்றிக் இப்சனின் ஒரு பாவையின் வீடு ,வில்லியம் ஷேக்ஸ்பியரின் யூலியஸ்சீசர் ஆகியவற்றின் திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக நாளை வியாழக்கிழமை அன்ரிக்கனியும் ,வெள்ளிக்கிழமை ஒரு பாவையின் வீடும் ,சனிக்கிழமை யூலியஸ் சீசரும் காண்பிக்கப்படவுள்ளன.

இதன் போது இவை தொடர்பான அறி முக உரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன.

மிகவும் அரிதாகக் கிடைக்கக்கூடிய இத் திரைப்படங்கள் மாணவர்களுக்கு தாம் கற்கும் பாடங்கள் தொடர்பான தெளிவை ஏற் படுத்துவதற்கு பயனுடையதாய் அமையும் என்பதால் மாணவர்கள் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறும் ஆர்வமுள்ள ஏனையவர்களும் இத்திரைப்படங்களை பார்வையிடலாம் எனவும் திருமறைக் கலா மன்றம் அறிவித்துள்ளது. (4-51)

# மாட்டுவண்டி சவாரிப்போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(கரவெட்டி)

புத்தூர் மேற்கு சப்தகன்னியர் தேவால யத்தின் வளர்ச்சிக்கான யாழ். மாவட்ட ரீதியாக மாட்டு வண்டி சவாரிப்போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி சவாரித்திடலில் நடத்தப்பட்டது.

இதில் 4 பிரிவுகளாக நடத்தப்பட்ட இப் போட்டியில் 30க்கும் மேற்பட்ட மாட்டுவண்டி கள் பங்குபற்றின. இதில்முதல் மூன்று இடங் களை பெற்றவர்களின் விபரம் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி மேற்பிரிவில் நியூற்றன் (இள வாலை),மகாலிங்கம் (வட்டுக்கோட்டை), சிவஞானம் ( அளவெட்டி ),தவராசா (பண் டைத்தரிப்பு) ஆகியோரும் B பிரிவில் மகா லிங்கம் (வட்டுக்கோட்டை), தரன் (புத்தூர்) செல்வேந்திர ராஜா (ஆவரங்கால்), குழந்தை யன் (மட்டுவில்) ஆகியோரும் பெற்றுள்ள னர்.

மேலும் C பிரிவில் தயாளினி (வட்டுக் கோட்டை) ,கமல்ராஜ் (வட்டுக்கோட்டை) லக்ஸ் மன் (நீர்வேலி),நந்தன் (மீசாலை) ஆகியோ ரும் , D பிரிவில் ஸ்ரீ வக்சன் (மல்லாகம்), கமல் ராஜ் (வட்டுக்கோட்டை),அன்ன பூரணி (வட்டுக் கோட்டை) ஆகியோரும் பெற்றுக் கொண் டனர். (4-24)

# நிறுவுனர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும்

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியின் நிறுவுனர் நினைவு தினமும் பரிசளிப்பு விழா வும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி திறந்த வெளியரங்கில் கல்லூரி அதிபர் திருமதி.அ.வேலுப்பிள்ளை தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் தேசியக்கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் கலந்துசிறப்பிப்பதுடன் நினை வுப்பேருரையை ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அதி பர் ஆறுதிருமுருகன் வழங்கவுள்ளார். (4)

# முன்பள்ளிகளுக்கான விநோத உடைப்போட்டியில் வெற்றியீட்டியோர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வின் இரண்டாவது நாளை முன் னிட்டு, நகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள் ளிகளுக்கிடையேயான விநோத உடை போட்டி நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கலைமகள் முன்பள்ளியைச் சேர்ந்த சுபாஸ்கரன் மானுஜா முதலாமிடத் தையும் பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த அற்புதன் விஸ்சுவ ரத்தன் மற்றும் நாமகல் முன்பள்ளியைச் சேர்ந்த ராஜன் அபிராமி ஆகியோர் இரண்டா வது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.(6-29)

# நிர்வாகசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண தெங்கு செய்கையாளர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 17ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல ,595/ 10, நாவலர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை காரியா லயத்தில் கலாநிதி சு.மோகனதாஸ் தலைமை யில் இடம் பெறவுள்ளது.

இதில் பழைய, புதிய தென்னம் தோட்ட உரிமையாளர்களை சேர்த்துக் கொள்வதுடன் தென்னை உரமானியம் , புதிய நடுகை மானி யம், இழந்த காணிகளை உரிமைபெறச் செய் தல், கண்ணி வெடி அகற்றுதல் ,காணிகளைத் துப்பரவு செய்தல் ஆகிய விடயங்கள் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் ஆராயப்படவுள்ள தால் சகல தென்னைத்தோட்ட உரிமையாளர் களையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது.

# மாட்டுவண்டி சவாரிப்போட்டி

நவகிரி எல்லாளன் விளையாட்டுக் கள கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட ரீதியிலான மாட்டு வண்டிச்சவாரிப்போட்டிகள் எதிர்வரும் 18ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு நீர்வேலி சவாரித் திடலில் நடைபெறவுள்ளது.

4 பிரிவுகளாக நடைபெறும் இப் போட்டிக ளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் அன் றைய தினமும் போட்டிகளில் பதிவு செய்து பங்குபெறலாம் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (6-24)

# மின் தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை - யாழ்ப்பாண பிரதான வீதியில் வீதி அகலமாக்கும் வேலைகளுக் கான உயர் அழுத்த மின் கம்பங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை புன்னாலைக் கட்டுவன் ,அச்செழு ,புத்தூர்,ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு மற்றும் வடமராட்சி பிரதேசம் முழுவதும் மின் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (6-4)

# கட்டாக்காலிகளாக திரியும் கால்நடைகள்

(கொழும்புத்துறை)

கடந்த 1995,2006ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளின் போது கைவிட்டுச் சென்ற கால்நடைகள் தற்போது நாவலடி, பூம்புகார் மற்றும் கிழக்கு அரி யாலை பகுதிக்காணிகளில் கட்டாக்காலிக ளாக திரிவதை அவதானிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் சில மாடுகள் இராணுவத்தி னரின் பராமரிப்பில் தற்போது வளர்க்கப்பட்டு வருவதாக பண்ணை வளர்ப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இருந்தும் சில கட்டாக்காலிகளை சில விசமிகள் வேட்டையாடி வருவதால், இவை பீதி , காரணமாக கிழக்கு அரியாலைப்பகுதி களுக்குள் ஓடி மறைவதாக தெரிவிக்கப்படு கிறது. (6-51)

# உகண்டாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இலங்கையர் பலி

(கொழும்பு)

74 பேர்களின் உயிர்களை காவு கொண்ட உகண்டாவின் தலைநகர் கம்பாலாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களில் இலங்கையர் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக கென்யாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் ஜெயந்த திஸ்ஸ நாயக்க கருத்து தெரிவிக்கையில், இந்த குண்டு வெடிப்புக்களில் இலங்கையை சேர்ந்த இராமராஜன் கிருஷ்ணராஜா என்பவர் உயிரிழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர் எனவும் அங்குள்ள அல்சபா என்ற இயக்கத்தினரே இத்தகைய குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அந்நாட்டின் சட்டஒழுங்கு குழப்ப நிலையில் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

## செயன்முறைக் கண்காட்சி

யாழ். மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலையின் ஆரம்பகல்வி செயன்முறைக் கண்காட்சி நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை பாடசாலை மண்டபத்தில் அதிபர் சூ.நோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி றூபா உதயரட்ணம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4)

## சனசமூக நிலையங்களுக்கான அறிவித்தல்

சனசமூக நிலையங்கள் அனைத்துக்கும் புதிய பதிவிலக்கங்களை வழங்குவதன் பொருட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் விபரங்கள் கோரப்பட்டு பிரதேச சபைகள் ஊடாக சனசமூக நிலையங்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

எனினும் வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பல சனசமூக நிலையங்கள் இதுவரை குறித்த படிவங்களை பூரணப்படுத்தி சமர்ப்பிக்கவில்லை எனவும் இதுவரை சமர்ப்பிக்காத அனைத்து சனசமூக நிலையங்களினதும் படிவங்கள் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் வேலணை பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (6-4)

## மாணிக்கவாசகர் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு சைவசமய அருள் நெறிமன்றத்தினால் நடாத்தப்படும் மாணிக்கவாசகர் குருபூசைத்தினம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

இதில் "அமுதடி அடைந்த அன்பர்" என்ற பொருளில் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் கருத்துரை வழங்கவுள்ளார். அத்துடன் விசேடநிகழ்ச்சிகளாக திருவாசக முற்றோதல், அன்னதானம் என்பன இடம்பெறவுள்ளன. (6-4)


## விசேட பொதுச்சபை கூட்ட அறிவித்தல்
## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பதிவாளரும் (வடக்கு மாகாணம்) அவர்களின் NP /15/JA /G /82 இலக்கம் கொண்டதும் 2010.04.28 ஆம் திகதிய கடிதம் மூலம் 1973 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கங்கள் வீதி 18(1) இன் கீழ் சங்கத்தின் பொதுச்சபையை கூட்டுவதற்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கமைய மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தின் விசேட பொதுச்சபை கூட்டத்தினை பின்வரும் நிகழ்ச்சி நிரலுக்கமைய 2010.07.17 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மகாநாட்டு மண்டபத்தில் கூட்டப்படுகின்றது. முழு அங்கத்துவத்தினையும் பெற்றுள்ள சபை அங்கத்தவர்களும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நிகழ்ச்சி நிரல்

1. மௌன வணக்கம்
2. தலைமையுரை
3. நெறியாளர் குழு உறுப்பினர் தெரிவு

பொ.மோகன்
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்,
யாழ்ப்பாணம். (சி/643)



## பனை அபிவிருத்திச்சபை

"பனை சார் பயிற்சி நெறியினை
பூர்த்தி செய்தவர்களுடன் கலந்துரையாடல்"

காலம் : 22.07.2010 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு
இடம் : யாழ். பனை அபிவிருத்திச் சபை தலைமைக் காரியாலயம்

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. பசுபதி சீவரத்தினம் அவர்களின் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெறும்.

*வருக! வந்து பயன் பெறுக!*

தலைவர்,
பனை அபிவிருத்திச்சபை,
தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டிடம்,
முதலாம் மாடி, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/640)



## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

மேற்படி திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள பின்வரும் வீதி வேலைக்கு தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்தத்தின் பெயர் | இக்ராட் பதிவு | மீளளிக்கப்படாத பிணைப்பணம் | மீளளிக்கப்படும் பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 01. | மறவன் புலவு வீதி 1.00 கி.மீ | M6/C7 (பெருந்தெருக்கள்) | 1,000.00 | 70,000.00 |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக் காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர், பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. ICTAD வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

III. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

IV. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரர் தனது புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

V. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விபரங்களை வேலை நாட்களில் மு.ப 8.30ல் இருந்து பி.ப 4.15 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

VI. ஆங்கில மொழியிலான ஒப்பந்த ஆவணங்களை 15.07.2010 முதல் 28.07.2010 வரை வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணியில் இருந்து பிற்பகல் 3.00 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலே அட்டவணையில் காட்டப்பட்டவாறு மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும் கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

VII. அந்தந்த வேலைக்குரிய பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு 29.07.2010 முற்பகல் 10.30 மணிக்கு முன்பாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் மாவட்டச் செயலகத்தில் வைத்து திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

VIII. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பேற்கமாட்டார்.

திரு.கே.கணேஸ்
தலைவர்,
மாவட்டகேள்விச்சபை.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/639)


## வடக்கு- கிழக்கு மாகாணங்களில் விதாதா வள நிலையங்கள்

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் விதாதா வள நிலையங்கள் அமைக்கப்படுவதுடன் இவ்வருட இறுதிக்குள் இரு மாகாணங்களிலும் 35 நிலையங்கள் அமைக்கப்படுமென விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இவ்வருட இறுதிக்குள் 332 விதாதா நிலையங்களை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 258 நிலையங்கள் தற்போது அமைக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இது வரை 37 விதாதா வள நிலையங்கள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது. (6)

## பாதாள உலக குழுக்களை சேர்ந்த பலர் தலைமறைவு

(கொழும்பு)

பிரபல பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த பலர் தலைமறைவாகியுள்ளதாகவும் மேற்படி குழுக்களைச் சேர்ந்த 20க்கு மேற்பட்டவர்களை காணவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு காணாமல் போனவர்களில் பலர் ஆயுதக் குழுகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றதுடன் குறிப்பாக மாளிகாவத்தை உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பாதாள உலக குழுக்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் காணாமல் போயுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளை வானில் வந்த ஆயததாரிகள் தம்மை கடத்திச் சென்றதாக பிரபல பாதாள உலகக் குழுத்தலைவர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (6)

# உயிரியல் II-A நேரம் : 1 மணி

## அமைப்புக் கட்டுரை வினாக்கள்

(01) (A) புரதம் அமினோ அமிலங்களின் பல்பகுதியமாகும் அமினோ அமிலத்தின்,

1) பொதுவான இரசாயனக்குறியீட்டை எழுதுக?


2) இக்கட்டமைப்பில், தொழிற்படும் கூட்டங்கள் எவை?

3) அமினோ அமிலம் கார இயல்பையும் அமில இயல்பையும் காண்பிக்கும் ஒரு இரசாயனச் சேர்வை இவ்வியல்புகளுக்கு காரணமாக இருக்கும் பிரதான அம்சம் எது எனக்கூறி விளக்குக.

4) புரதத்தின் நான்கு வகையான கட்டமைப்புகளைக் கூறி ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணம் தருக?

5) இணைந்த புரதம் என்பது யாது? இதற்கு ஒரு உதாரணம் தருக?

(B) கீழ் தரப்பட்டுள்ள அங்கிகள் கணம் ஆத்திரப்போடாவின் ஐந்து வகுப்புகளிலும் உள்ள விலங்குகளை எடுத்துக்காட்டுகின்றது. இவற்றின் பிரதான இயல்பை அடிப்படையாகக் கொண்டு இவ்வங்கிகளை இனங்காண்பதற்குரிய இருகிளைச் சாவியை தயாரிக்க.




(C) கீழ்தரப்பட்ட பந்தியில் கீறிட்ட இடங்களை நிரப்புக.
தாவரங்களில் முதல் வளர்ச்சி நடைபெறுவது (1) ............... (2) ........................ என்ற பகுதிகளில் இங்கு முதல் வளர்ச்சி (3) ...................... இன் தொழிற்பாட்டினால் நடைபெறும். இதனால் தாவரங்களில் (4) ................ அதிகரிப்பு ஏற்படும். துணை வளர்ச்சி (5) .................. இழையத்தினால் நடைபெறும் இது (6) ......................... (7) ......................... என வகைப்படுத்தப்படும் துணை வளர்ச்சியில் இருவித்திலைத் தாவரத் தண்டில் (8) ..................... அதிகரிப்பு ஏற்படும். இதற்குக் காரணம் தண்டில் (9) ...................... (10) .................. மேலதிகமாக சேர்க்கப்படுதல்.

தாவரங்களில் துணைவளர்ச்சி நடைபெறுவதால் பெறப்படும் அனுகூலங்கள் எவை?

(D) 1) நியூக்கிளிக்கமிலத்தில் உள்ள பியூறின் பிரிமிடின் நியூக்கிளையோரைட்டுகளைக் குறிப்பிடுக.


2) இலைசோசோம் என்றால் என்ன?

3) ஒரு படத்தின் உதவியுடன் இலைசோசோம் கலத்தக சமிபாட்டில் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதை விளக்குக?

4) தின்குழியமாதல், திரவக்குழியமாதல் ஆகிய செயற்பாடுகளை வேறுபடுத்துக.

5) Eukaryotic சவுக்குமுளை 9+2 அமைப்புடையது இதனை விளக்குக.

(02) 1) கீழே தரப்பட்டுள்ள வரைபடம் கலங்களுக்கும் குருதிக்கும் இடையில் பதார்த்தங்கள் பரிமாற்றப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது.




a) 1. பாய்பொருள் D யைப் பெயரிடுக?

2. பாய்பொருள் D எவ்வாறு உருவாக்கப்படுகிறது?

3. பாய்பொருள் D சுற்றோட்டத் தொகுதியை எவ்வாறு வந்து அடைகிறது?

4. E என்ற கட்டமைப்பைப் பெயரிடுக?

5. வரைபடத்தை அடிப்படையாகக கொண்டு E ஐ அடையாளம் காண உதவிய இரு அவதானங்களைக் குறிப்பிடுக?

b) 1. பாய்பொருள் D ஊடு பரவல் அடையக்கூடிய கரையக் கூடிய மூன்று பதார்த்தங்கள் A,B,C எனத் தரப்பட்டுள்ளன. இவற்றைப் பெயரிடுக?

2. A யிற்கு யாது நடைபெறும்?

3. அது எங்கு நடைபெறும் எவ்வாறு நடைபெறும் என சுருக்கமாகக் கூறுக?


4. F என்பது யாது? இதன் தொழிற்பாட்டைக் குறிப்பிடுக?

5. G என்பது யாது? இதன் தொழிற்பாட்டைக் குறிப்பிடுக?

c) 1. ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருப்பின் குருதி முதலுருவின் திரவிழையத்தின் இரசாயன அமைப்பில் ஏற்படும் மாற்றம் யாது?

2. இது தொடர்ந்து நீடிக்குமாயின் R.B.C ற்கு யாது நிகழும்?

3. இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் செய்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?




d) x,y என்பது இருவகையான சுற்றோட்டத்தொகுதிகளை எடுத்துக்காட்டுகின்றது.

1. மேற்காட்டப்பட்ட சுற்றோட்டத் தொகுதிகளைக் காண்பிக்கும் அங்கிகள் ஒவ்வொன்றுக்கு உதாரணம் தருக?
x காண்பது ..........................
y காண்பது ..........................

2. x என்ற சுற்றோட்டத் தொகுதிக்கும் y என்ற சுற்றோட்டத் தொகுதிக்கும் இடையிலான ஒற்றுமையையும் ஒரு வேறுபாட்டையும் தருக?

3. x இல் தரப்பட்டுள்ள சுற்றோட்டப்பாதைகளான A,B யைப் பெயரிடுக?

4. x,y போன்ற சுற்றோட்டத் தொகுதிகளுக்கும் உடைய சுவாசமேற்பரப்புகளைத் தருக?

5. தரப்பட்ட கட்டமைப்பில் ஒட்சியேற்றப்பட்ட குருதி கொண்டு செல்லும் பாதையை நிறம் தீட்டிக் காண்பிக்கவும்.

# புகலிடக் கோரிக்கையாளர்களை

## தங்க வைக்க கிழக்குத் தீமோர் எதிர்ப்பு

இலங்கை உள்ளிட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் தமது நாட்டில் தங்க வைக்கப்படுவதற்கு அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமரால் முன் வைக்கப்பட்ட யோசனையை கிழக்குத் தீமோர் பாராளுமன்றம் ஏக மனதாக நிராகரித்தது.

இந்த யேர்சனைக்கு எதிராக 34 பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தாம் தயாராக இருக்கின்ற போதும் அது குறித்து தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் தமது அரசாங்கத்திற்கே உள்ளது என கிழக்குத் தீமோரின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் நுழையும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு தஞ்சம் வழங்குவது குறித்து தீர்மானம் ஒன்றை எடுக்கும் வரை அவர்களை கிழக்குத் தீமோரில் தங்க வைப்பதற்கு அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் யோசனை முன் வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.இதேவேளை அவுஸ்திரேலியா வுக்குள் சட்ட விரோதமாக நுழையும் புகலிடக் கோரிக்கையாளர்கள் தற்போது கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (6)

## மன்னாரில் தலையில்லாத சடலம் கண்டுபிடிப்பு

மன்னார் கடற்குடா கடற்கரை ஓரத்தில் இருந்து தலையில்லாத சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சடலத்தில் தலை இல்லாத காரணத்தால் உயிரிழந்தவர் பற்றிய தகவல்களை திரட்டுவதில் சிரமம் ஏற்பட்டுள் ளது.

கண்டு எடுக்கப்பட்ட சடலம் தற்போது மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் பொலிஸார் இது வொரு கொலையா என்பதை கண்டறிவதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (6)

# டெங்கு அதிர்ச்சியினால் ஏற்படும் உயிரிழப்பைத் தடுக்க புதிய மருந்து

## உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகாரம்

(கொழும்பு)

டெங்கு அதிர்ச்சியினால் ஏற்படும் உயிரிழப்புக்களைத் தடுப்பதற்காக அரச ஆஸ்பத்திரிகளில் புதிய மருந்தொன்றை அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ளது. டெங்கு நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை மேற்கொண்டாலும் டெங்கு அதிர்ச்சியினால் அவர்கள் இறப்பது கூடுதலாக இடம்பெறுவதாக நிபுணத்துவ மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

இதற்காக தாய்லாந்தில் பயன்படுத்தும் மருந்து வகை ஒன்றை இலங்கை ஆஸ்பத்திரிகளுக்கு வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை டெங்கு நோய் மீண்டும் வேகமாக பரவ ஆரம்பித்துள்ளதாகவும் மக்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறும் டெங்கு நோய் தடுப்புப் பிரிவு மக்களை எச்சரித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் இரு மாதங்களிலும் டெங்கு நோய் வேகமாக பரவி வந்ததோடு மே மாதமாகும் போது டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

ஆனால் கடந்த மாதம் முதல் மீண்டும் சில மாவட்டங்களில் டெங்கு நோய் வேகமாக பரவ ஆரம்பித்துள்ளதாக மேற்படி பிரிவு அறிவித்துள்ளது.

இதன் படி கடந்த ஜனவரி முதல் இதுவரை சுமார் 20ஆயிரம் பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள் ளதோடு 140இற்கும் அதிகமானவர்கள் இறந்துள் ளனர். (6)

# இலங்கை பணிப்பெண்கள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

பஹ்ரெயினின் ரீஸா நகரிலுள்ள ஆடை உற்பத்தித் தொழிற்சாலையில் பணியாற்றும் இலங்கைப் பணிப்பெண்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வேலைத் தளத்தில் தாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக்கடந்த வியாழக்கிழமை முதல் இவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் 800க்கும் மேற்பட்ட இலங்கைப் பணிப் பெண்களே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தமது சேவைக்கேற்ப மேலதிகக் கொடுப்பனவு கிடைப்பதில்லையெனவும் அவசரத் தேவைகளின் போது விடுமுறைகள் வழங்கப்படுவதில்லையெனவும் இலங்கைப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது பிரச்சினைகள் குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்துவதில்லையெனவும் தாம் துயரத்துடன் பணியாற்றி வருவதாகவும் தமது நிலைபற்றி பஹ்ரெயினிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர்கள் குறிப்பிடுகின்றனர். (6-4)

## வடக்கு இணைப்புத் தொடர்பில்

# தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முதலில் எம்முடன் பேசவேண்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கை மீள இணைப்பது தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முதலில் எம்முடன் பேச்சுவார்த்தை நடத் தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.


வடக்கு கிழக்கை மீள இணைப்பது தொடர்பில் வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தவதற்கு முன்னர் , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கை மீள இணைப்பது குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தமிழ் ஊடகம் ஒன்றில் வெளியான செய்தி தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாரத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் நடைபெறவுள்ள சந்திப்பின் போது இந்த விடயம் குறித்து கலந்தாலோசிக்கப்படவுள்ளதாகவும் இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டமைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (6)

## 14.07.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்



- 1223-எட்டாம் லூயி பிரான்சின் மன்னனாக முடி சூடினான்.
- 1865- எட்வர்ட் வைம்ப்பர் தனது உதவியாட்களுடன் ஆல்பஸ் மலைத் தொடரின் மாட்டர்ஹோர்ன் மலையின் உச்சியை முதற் தடவையாக எட்டினார். இவர்கள் திரும்பி வருகையில் இவருடன் வந்த 4 பேர் உயிரிழந்தனர்.
- 1889- பாரிசில் கூடிய சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேச தொழிலாளர்களின் சர்வதேச தொழி லாளர் பாராளுமன்ற நிகழ்வுகளில் பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்பட 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் பங்கேற்றனர். இதில் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி வேலை-நேரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என முடிவாகியது.
- 1933- ஜெர்மனியில் நாசிக் கட்சி தவிர்த்து அனைத்து அரசியற் கட்சிகளும் தடை செய்யப்பட்டன.
- 1948- இத்தாலியின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பல்மீரோ டொக்ளியாட்டி பாராளுமன்றத்துக்கு முன்னர் சுடப்பட்டார்.
- 1958- ஈராக்கியப் புரட்சி ஈராக்கில் மன்னராட்சி முடிவுக்கு வந்தது. அப்துல் கரீம் காசிம் நாட்டின் புதிய தலைவரானார்.
- 1965- மரைனர் 4 செவ்வாய்க் கோளுக்குக் கிட்டவாகச் சென்று முதற் தடவையாக வேறொரு கோளின் மிக அண்மையான படங்களைப் பூமிக்கு அனுப்பியது.
- 1966- கௌதமாலா நகரில் மனநோய் வைத்தியசாலையில் இடம்பெற்ற தீ விபத்தில் 225 பேர் கொல்லப்பட்டனர்.
- 1967-நாசாவின் சேர்வெயர் 4 ஆளில்லா விண்கலம் ஏவப்பட்டது.
- 1989- பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவை பிரான்ஸ் கொண்டாடியது.
- 1995- MP3 பெயரிடப்பட்டது.
- 1995- இலங்கை இராணுவத்தினரின் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் புக்காரா ரக விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1997- சேகுவோராவினதும் தோழர்களதும் உடல் எச்சங்கள் கியூபா வந்தடைந்தன.
- 2002- பாஸ்டில் நாள் நிகழ்வுகளில் கலந்து கொண்ட பிரெஞ்சு அதிபர் ஜாக் சிராக் கொலை முயற்சி ஒன்றில் இருந்து உயிர் தப்பினார்.
- 2007- ஐரோப்பாவில் மரபுவழி இராணுவப் படைகள் குறித்த உடன்பாட்டில் இருந்து ரஷ்யா விலகியது.


### பிறப்புகள்

- 1929-வா.செ.குழந்தைசாமி இந்தியப் பொறியியல் அறிஞர்
- 1943- ரோகண விஜயவீர மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் புரட்சியாளர் (இ.1989)

### இறப்புகள்

- 1827- அகஸ்டீன் -ஜீன் ஃபிரெனெல் பிரெஞ்சு இயற்பியலாளர் (பி.1788)
- 1998- டிக் மக்டொனால்ட் மக்டொனால்ட் நிறுவன தாபகர் (பி.1909)
- 2008- சுசுமு ஒனோ ஜப்பானித் தமிழறிஞர் (பி.1919)

**1789-பிரெஞ்சுப் புரட்சி பாரிஸ் மக்கள் பாஸ்டில் சிறையைத் தகர்த்து சிறைக் கைதிகளை விடுவித்து இராணுவத் தளபாடங்களைக் கைப்பற்றினர்.**



# இந்திய முறையிலான தேர்தல் ஆணைக்குழுவொன்றை அமைப்பது குறித்து கவனம்

(கொழும்பு)

இந்திய முறையிலான தேர்தல் ஆணைக் குழுவொன்றை அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் தேர்தல் ஆணையாளருக்கு கூடுதலான அதிகாரங்கள் காணப்படுவதாகவும் அதேபோன்றதொரு நிலைமையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவை அமைப்பது குறித்து செயலக அதிகாரிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

7பேர் அடங்கிய குழுவொன்று தேர்தல் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கவுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழுவினை சுயாதீனமான அலகாக மாற்றுவது தொடர்பில் ஆலோசனை செய்யப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதிக்கு இந்த விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டதன் பின்னர் ஆணைக்குழு அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் காலதாமதமாகக்கூடும் என குறிப்பிடப்படுகிறது.

கடந்த பொதுத்தேர்தல்களின் பின்னர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர் நாடு திரும்பும் வரையிலும் புதிய அரசியல் கட்சிகளை பதியும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# சரத் பொன்சேகாவுக்கு எதிராக மேலும் இரு புதிய சிவில் வழக்குகள்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி. சரத் பொன்சேகாவுக்கு எதிராக தற்போது மேலும் இரு புதிய சிவில் வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஒரு சிவில் வழக்கு மற்றும் இரண்டு இராணுவ வழக்குகள் அவர் மீது ஏற்கனவே போடப்பட்டிருந்தன.

தற்போது தனது ஜனாதிபதி தேர்தல் பிரச்சார காலத்தில் இராணுவத்தில் இருந்து தப்பிச்சென்றவர்களை அவர் பயன்படுத்தினார் என்று புதிய வழக்குகளில் ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதுடன் இவ் வழக்கு யூலை 26ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சரத்பொன்சோகவும் அவரது ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சார செயலாளரும் பிரச்சார காலத்தில் இராணுவத்தில் இருந்து தப்பிச்சென்ற 10 பேரை வேலைக்கு அமர்த்தி இருந்தார்கள் என்பதற்கு தம்மிடம் உரிய ஆதாரங்கள் இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

அத்துடன் இந்தக் குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டால் அவருக்கு 20 வருடம் சிறைத் தண்டனை வழங்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மற்றும் ஒரு புதிய வழக்கில் அவருக்கு எதிராக 21 புதிய குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் சுமத்தியிருப்பதுடன் அவர் இராணுவத்தின் தளபதியாக இருந்த போது இராணுவத் தளபாடங்கள் வாங்கியதில் ஊழல் செய்திருந்தார் என்பதும் அந்த வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களில் ஒன்றாகும்.

இவ் வழக்கில் அவரது மருமகனும் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# உள்ளூராட்சி வார மூன்றாம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களில் மூன்றாம் நாளான இன்று புதன்கிழமை சுற்றாடல் தின வேலைத்திட்டத்தின் கீழ் சுற்றாடல் விழிப்புணர்வு கருத்தரங்கும் சிரமதான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (6-4)

# மாணிக்கவாசகர் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

வழக்கம்பரை சுழிபுரத்தில் உள்ள சிவ பூமி முதியோர் இல்லத்தில் இன்று புதன் கிழமை பி.ப. 3.00மணிக்கு மாணிக்க வாசகர் சுவாமி குருபூசை நடைபெறவுள்ளது.

இதில் யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (6-4)

# தர்சிகாவின் மரணம் தொடர்பான விசாரணை விரைவு படுத்தப்பட வேண்டும்

## ஈ.பி.டி.பி.கோரிக்கை

குடும்ப நல உத்தியோகத்தர் செல்வி தர்சிகா சரவணையின் மரணம் தீவக மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அச்சத்தையும் தோற்றி வித்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் நியாயமான விசாரணைகள் நடைபெற்று உண்மை வெளிவரச் செய்வதோடு குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுவோர் சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பி. அறிக்கை விடுத்துள்ளது.

அவர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 10ஆம் திகதி வேலணை வைத்தியசாலையில் கடமைக்குச் சென்றிருந்த செல்வி தர்சிகா சரவணை தனது கடமையை பெறுப்பேற்று கையொப்பமிட்ட பின்னர் அவரை காணவில்லை என சக பணியாளர்கள் பதற்றமடைந்துள்ளனர். பின்னர் விடுதி அறையில் அவர் தூக்கில் தொங்கியபடி காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. அவர் கொலை செய்யப்பட்டிருக்கக்கூடும் என்றும் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டிருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பல்வேறு ஊகங்கள் மக்கள் மத்தியில் தோன்றியிருப்பதானது அநாவசியமான பிரச்சினைகளுக்கே வழி வகுக்கும் எனவே செல்வி தர்சிகாவின் மரணம் தொடர்பில் பொலிஸார் விரிவானதும் விரைவானதுமான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விடயம் தொடர்பில் தீவகப் பகுதி மக்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ்தேவானந்தா அவர்களுக்கு கோரிக்கை மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.


அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா கௌரவ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கும்,பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கும் இப்பிரச்சினையை கொண்டு சென்றுள்ளார்.

யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் இடம்பெறுகின்ற மக்கள் விரோதச் செயற்பாடுகளானது எமது மக்கள் மத்தியில் இன ரீதியானதும் பாரபட்டசமானதுமான சூழ்நிலைகளையே வளர்க்கக்கூடும். ஆகவே பொலிஸாரின் விரைந்த செயற்பாடு மிக மிக அவசியம் என நாம் கருதுகின்றோம்.

செல்வி தர்சிகாவின் மரணத்தின் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தாருக்கு ஈ.பி.டி.பியும் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது என்றுள்ளது. (ச)

# ஐ.நா. நிபுணர்கள் தொடர்பில் கவலைப்படப் போவதில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு தொடர்பில் கவலைப்படப்போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா என்பது குறித்து ஆராயும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு தொடர்பில் வருத்தமடைய வேண்டியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டில் சமாதானத்தையும், அமைதியையும் உருவாக்கிய நாடு என்ற வகையில் இலங்கையை உலக நாடுகள் நோக்க வேண்டும் எனவும் அபிவிருத்தி அடைந்த மற்றும் சிறந்த நாடாக உருவாகும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தை சிறந்த முறையில் பராமரித்தமையே யுத்த வெற்றியின் இரகசியம் என்றும் இதனை இரகசியம் என்பதனை விடவும் புத்திசாதிரியமாக கருத வேண்டும் எனவும் வெளிநாட்டுச் சக்திகளை யுத்தத்தில் பங்கேற்க செய்யாது மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டால் யுத்தங்களை வெற்றி கொள்வது கடினமாகாது என அவர் தெரிவித்துள்ளார். (6)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 10 முதல் 13 வரை வர்த்தக பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஆசிரியர்கள் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடப்புத்தகம் என்ப வற்றை தவறாது கொண்டுவருமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)


19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

July.2010 to Dec..2010

- தபால் மூலம் -

தமிழ் மொழி மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா

~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா

~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா

~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Nursing Administration.- தாதியர் நிர்வாக டிப்ளோமா

~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா

~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:


Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.07.2010

(18) தாவரங்கள் தாம் உள்ளெடுக்கும் நீரில் மேலதிக நீர் உள்ளெடுக்கப்படுவதைத் தவிர்க்க மேற்கொள்ளப்படும் வழிமுறையாவது பின்வருவனவற்றுள் எது?
1. போதியளவு நீர் உள்ளெடுக்கப்பட்டதும் வேரிலுள்ள கலமென்சவ்வு, நீர்புகவிடும் தன்மையை இழக்கின்றது.
2. மேலதிக நீர் தாவர உடல் மேற்பரப்பிலிருந்து இழக்கப்பட்டு நீர்ச்சமனிலை பேணப்படுகின்றது.
3. புறத்தோல், பட்டைவாய், இலைவாய் என்பனவற்றினூடு நீரானது ஆவியுயிர்ப்பினால் இழக்கப்படுவதன் மூலம்
4. Casparian கீலங்கள் கலச்சுவரில் காணப்படுவதன் மூலம் மேலதிகமான நீர் உள்ளெடுப்பது தடுக்கப்படுகிறது.
5. மண்ணிலுள்ள நீர் ஆவியாதல் மூலம் இழக்கப்படுதல் மூலம்

(19) பின்வருவனவற்றுள் எது ஒளித்தொகுப்பின் போது இலத்திரன் இடம்மாற்றத்தை சரியாக எடுத்துக்காட்டும் தொடர் ஆகும்
1. NADPH2 $O_2 \Longrightarrow CO_2$
2. $H_2O$ NADPH $\Longrightarrow$ Calvin Cycle
3. $H_2O$ ஒளித்தொகுதி I $\Longrightarrow$ ஒளித்தொகுதி $II_2$
4. NADPH இலத்திரன் இடம்மாற்றத்தொகுதி $\Longrightarrow$ $O_2$
5. ஒளித்தொகுதி II $\Longrightarrow$ ஒளித்தொகுதி I $\Longrightarrow$ NADPH $\Longrightarrow$ Calvin Cycle

(20) கீழே தரப்பட்டுள்ள வரைபடமானது தாவரக்காலம் ஒன்று தூயநீரில் வைக்கப்படும் போது அதில் ஏற்படும் பல்வேறு வகையான அழுத்தங்களாவன மடஅெ என்பனவைக் காட்டுகிறது. இவற்றில் எவ்அழுத்தம் கலத்தின் வீக்கத்துடன் தொடர்புடையது?





1.K 2. L 3. M 4. N 5. K,L

(21) பின்வரும் ஓமோன்களில் ஸ்ரீரோயிட் ஆகக் கருதப்படக்கூடியவை,
(a) cortisol (b) testosterone (c) Oestrogen
(d) Gonadotrophin (சனனித்திருப்ப ஓமோன்)

1.A,B 2. B,C 3. C,D 4. A,C 5. A,B,C


22. பின்வரும் வரைபுகளில் எது உயிரற்ற புறவன் கூட்டினால் சூழப்பட்ட ஒரு அங்கியின் வளர்ச்சி வரைபை எடுத்துக்காட்டுகின்றது. (X - வளர்ச்சி, Y - காலம்)



(A) (B) (C) (D) (E)

1.A 2. C 3. D 4. B 5. E

23. கீழே தரப்பட்டுள்ள படங்கள் சில குருதிக்கலன்களின் குறுக்குவெட்டு முகத்தைக் காட்டுகின்றது.



W X Y

மேற்காட்டிய கலன்வகைகள் செய்யும் தொழில்கள் அக்கலன் வகைகளுடன் தொடர்பாக தரப்பட்ட ஒழுங்கில் சரியானது யாது?

| | திரவம் வடிகட்டக்கூடியது | அதியுயர் அமுக்கத்துடன் காணப்படல் | திரவம் ஓட மிகவும் குறைந்த தடை |
|---|---|---|---|
| 1) | Y | W | X |
| 2) | y | X | w |
| 3) | X | W | y |
| 4) | X | Y | X |
| 5) | W | X | Y |

24. பின்வருவனவற்றில் எது மனிதனின் சுவாச நிறப்பொருட்களுள் அதிக அளவு $O_2$ நாட்டம் உடையது,
1. முதிர்வுற்ற செங்குழிய ஈமோகுளோபின்
2. நிறவுடலி மனிதனின் செங்குழிய ஈமோகுளோபின்
3. முதிர்மூலவுருவின் செங்குழிய ஈமோகுளோபின்
4. மயோகுளோபின்
5. முதிர்மூலவுருவின் மயோகுளோபின்

(25) மைய நரம்புத்தொகுதியில் இரண்டு நரம்புக் கலங்களிடையில் இணைப்பை ஏற்படுத்துவது,
1. கலமென்சவ்வு
2. முதலுரு இணைப்பு
3. ஒட்டும் சந்தி
4. நரம்பு இணைப்பு
5. இறுக்கச் சந்தி

(26) வெளிக்காவு முளையூடு கணத்தாக்கம் செல்லும் போது மறைகாலம் (Refractory period) என்பது.
1.கணத்தாக்கத்தைப் பிறப்பிப்பதற்கு தேவையான காலத்தைக் குறிக்கும்.
2.தூண்டல் இழிவுப் பெறுமானத்தை அடைந்து தாக்க அழுத்தத்தைத் தொடக்கி வைக்கலான நேரம்
3.தாக்க அழுத்தம் தொடங்கி வைக்க முதல் ,வெளிக்காவு நரம்பு முளையில் இருக்க வேண்டிய நேரம் இடைவெளி
4.வாங்கியிலிருந்து கணத்தாக்கம் மையநரம்புத் தொகுதியை நோக்கிச் செல்ல எடுக்கும் நேரம்
5.மைய நரம்புத் தொகுதியிலிருந்து கணத்தாக்கம் விளைவுகாட்டியை நோக்கி எடுத்துச் செல்ல எடுக்கும் நேரம்.

27.பின்வருவனவற்றுள் எது ஈரலின் தொழில் அல்லாதது
1.குருதியின் வெல்ல மட்டத்தைச் சீராக்கல்
2.அமினோ அமிலம், புரதம் என்பனவின் அளவைச் சீராக்கல்
3.மாறா வெப்பநிலை உள்ள விலங்குகளில் உடல் வெப்ப நிலையைச் சீராக்கல்
4.குருதியிலுள்ள வளர்ச்சி ஓமோனின் அளவைச் சீராக்கல்
5.உடலினுள் சுற்றிஓடும் குருதி கனவளவை ஒழுங்காக்கல்

28. மனிதனின் நிணநீர் தொகுதியின் நிர்ப்பீடனத்துடன் தொடர்பான பிரதான தொழில் யாது?
1.இழையப்பாய்பொர்ருள் மீண்டும் சுற்றோட்டத்தொகுதியை அடைதல்
2.உடலினூடு கொழுப்பமிலத்தைக் கொண்டு செல்லல்
3.நிணநீர்க்குழியங்களில் பிறபொருட்கள் வடிகட்டப்படல்
4. T வகை நிணநீர்க்குழியங்கள் அத்தொகுதியினூடாகவே பிரதானமாகக் கொண்டு செல்லப்படுகிறது.
5.இழையப்பொருளை ஆக்குவதில் நிணநீர்த்தொகுதி பங்குகொள்ளல்

29.பின்வரும் ஓமோன்களில் எது பெப்டைட்டு ஓமோன்
1.Cortisol 2.Prolactin 3.Oestrogen
4. Progeaterone 5.Gastrin

30.$CO_2$ உடலினுள் கொண்டு செல்லப்படும் வடிவங்களில் பெருமளவு சதவீதம் காவப்படுவது,
1.காபோனிக்கமிலமாக
2.இருகாபனேட் அயனாக
3.காபமைனோ ஈமோகுளோபினாக
4.காபொட்சியேற்று வடிவத்தில்
5.காபனேற்று அயனாக

31. ADHஎன்ற ஓமோன் பின்வரும் செயற்பாடுகளில் எச் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது,
1.சிறுநீர் சிறு குழாய்களால் நீர் மீள அகத்துறிஞ்சலைத் தடுப்பதற்கு
2.சிறுநீர் சிறுகுழாயின் உள்ளிடத்தைச் சூழ உள்ள கலங்களின் நீர் புகவிடும் தன்மையைக் கூட்டி வடிதிரவத்திலிருந்து நீர் அகத்துறிஞ்சலை அதிகரித்தல்
3.சிறுநீர் சிறுகுழாயின் பிரசாரண அமுக்கத்தை இழையங்களிலுள்ள பிரசாரண அமுக்கத்தை விட குறைக்கப்பண்ணுவது
4.சிறு நீர் செறிவை உயர்த்தி,மேலதிக நீரை வியர்வை மூலம் வெளியேற்றல்
5.சிறுநீர்ப்பையினுள் சேர்க்கப்படும் சிறுநீரின் கனவளவை உயர்த்தல்

32.ஒரு கருத்தரித்த பெண்ணின் கருத்தரிப்பை உறுதிப்படுத்த பெண்ணின் சிறுநீர் சோதனையில் பின்வரும் ஓமோன்களில் எவ் ஓமோனுக்கான சோதனை மேற்கொள்ளப்படுகிறது.
1.Oestrogen 2.Progesterone 3.Prolactin
4.HCG-human chorion Gonadotrophin 5.LH

33.பிறப்புச் செயற்பாட்டின் போது சூல்வித்தகத்தால் சுரக்கப்படும் பதார்த்தம் கருப்பைச் சுவரை மேலும் சுருங்கச் செய்வதில் முக்கியத்துவம் பெறுகின்றது. அது எது?
1.Oestrogen 2.Progesterone 3.|Oxytocin
4.Prostaglandin 5.LH

34.குறித்த இனத்தின் ஒரு குடித்தொகை பரம்பரை அலகில் பரம்பரை அளகுகள் நீக்கப்படுதல் பின்வரும் எச்செயற்பாடு மூலம் நடைபெறும?
1.குறுக்குப் பரிமாற்றம்
2.நிறமூர்த்தங்களின்மீள் ஒழுங்காக்கல்
3.இயற்கைத் தேர்வு
4.வெவ்வேறு இனங்களிடேயே இனங் கலப்பு 5. விகாரம்

35. வெவ்வேறு சூழற்திதியில் காணப்படும் இரண்டு புதிய இனங்கள் ஒரே மூதாதையரிலிருந்து கூர்ப்படைவது பின்வரும் எச்செயற்பாட்டின் மூலம் நடைபெறும்.
1.சமாந்தரக்கூர்ப்பு 2.இசைவாக்கவிரிகை
3.விகாரம் 4.வழிமுறை வருதல்
5.இனஅழிவு

36.பின்வரும் கட்டமைப்புகளில் எது முள்ளந்தண்டு என்பின் அத்திலசு என்பில் காணப்படுவதில்லை?
1.மையத்தி 2. குறுக்குமுளை
3.நரம்புக்கால்வாய்
4.நரம்பு முள்
5.முள்ளந்தண்டு நாடிக்கான்

37.பின்வரும் கூற்றுக்களில் சில வகை இனப்பெருக்கக் கலங்களும் அவற்றின் விசேட சிறப்பியல்புகள் தொழில் என்பன தரப்பட்டுள்ளது .அவற்றில் சரியான தொடர்பைக் காட்டுவது எது,
1.விந்துக்கலம் அதிகளவு இழையமணியைக் கொண்டுள்ளது. அதன் இயக்கத்திற்கு வேண்டிய சக்தியைப் பிறப்பிக்கும்.
2.சூல் ஒருமடியமானது இரு பெற்றோருக்கும் உரிய பரம்பரை இயல்புகளைக் கொண்டது.
3.சூல் வித்தகம் மும்மடியகரு காணப்படும் அதிகளவு பாரம்பரிய தகவல்களைக் கொண்டிருக்கும்.
4.முனைவுடன் அழிவடையும் கலம் முளையத்திற்கு போசனையை வழங்கும்.
5.முட்டைக்குழியம் உருமாற்றம் காரணமாக சூழ்/முட்டையை உருவாக்கும்.

# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை

தரம்-13 | முன்னோடிப் பரீட்சை | ஆனி 2010

### உயிரியல் I நேரம் : 1 மணி

(01) சில கலப்புன்னங்கங்களும் அவற்றின் தொழிற்பாடுகளும் கீழே தரப்பட்டுள்ளன. தரப்பட்ட அங்கங்களின் தொழில்களுக்கு பொருந்தக்கூடிய கலப்புன்னங்கத்தை தொடர்புபடுத்தும் சரியான ஒழுங்கு எது

| புன்னங்கம் | தொழில் |
|---|---|
| a) Ribosome - இறைபோசோம் | I புரதத்தொகுப்பு |
| b) அகக்கலவுருச் சிறுவலை | II கலப்பதார்தங்களை சேகரித்து, பொதியாக்கி, விநியோகித்தல் |
| c) புன்கரு | III புரதம் திருத்தியமைக்கப்பட்டு, இலிப்பிட்டு தொகுப்பு நடைபெறும் |
| d) Golgi உபகரணம் | IV இறைபோசோமினுடைய உப அலகுகள் பொருந்தல் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| 1) | c | b | d | a |
| 2) | a | d | b | c |
| 3) | c | d | a | b |
| 4) | a | b | c | d |
| 5) | d | b | c | a |

(02) ஒரு DNA மூலக்கூற்று அச்சுப்பிரதி (Template) பின்வரும் நைதரசன் மூலக்கூற்றுத்தொடர் ஒழுங்கைக் கொண்டிருப்பின் இதனைப்பிரதி செய்யும் mRNA மூலக்கூறின் அமைப்பு பின்வருவனவற்றில் எதுவாக இருக்கலாம்.

DNA $5^1$T CGATGTA - $3^1$ என்ற ஒழுங்கில் உள்ளது என்க.
1) $5^1$ - AGCUACAU - $3^1$
2) $5^1$ - UACAUCGA - $3^1$
3) $5^1$ - AGCTACTAT - $3^1$
4) $5^1$ - TACATCGA - $3^1$
5) $3^1$ - TACATGCA - $5^1$

(03) நிரம்பாத இலிப்பிட்டு பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
1. தாவரங்களிலும் பார்க்க விலங்குகளில் பெரும்பாலும் காணப்படும். .
2. இவற்றின் கொழுப்பமில மூலக்கூற்றில் காபன் அணுக்களுக்கு இடையில் இரட்டைப் பிணைப்பு காணப்படும்.
3. இவை நிரம்பிய இலிப்பிட்டுக்களிலும் பார்க்க அதிகளவு ஐதரசன் அணுக்களைக் கொண்டிருக்கும்
4. இத்தகைய இலிப்பிட்டுக்களில் ஒவ்வொரு இலிப்பிட் மூலக்கூற்றிலும் குறைந்த கொழுப்பமிலங்கள் காணப்படும்.
5. இவை அறைவெப்பநிலையில் திண்மமாகக் காணப்படும்

(04) புரதத்தின் வெவ்வேறு வகையான கட்டமைப்புகளில் தமக்கிடையில் ஐதரசன் பிணைப்பு குலைவு அடைவதால் தமது கட்டமைப்பில் குறைந்தளவு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய அமைப்பு எது?
1. முதலான வகைப்புரதங்கள்
2. துணையான அமைப்புடைய புரதங்கள்
3. புடையான அமைப்புடையவை
4. நாற்புடைய அமைப்புடடையவை
5. முப்பரிமாண அமைப்புடைய கோளப்புரதங்கள்

(05) ஒரு அங்கி இரட்டை இழை அமைப்புடைய DNA மூலக்கூறு ஒன்றினைக் கொண்டிருந்தது. இதில் 10 000 சோடி நைதரசன் மூலங்கள் காணப்பட்டது எனில் எத்தனை பொஸ்பரஸ் மூலக்கூறுகள் அதில் காணப்படும்.
1. 5,000 2. 10,000 3. 20,000 4. 40,000 5. 80,000

(06) கடத்தும் இலத்திரன் நுணுக்குக்காட்டி தொடர்பான கூற்றுகளில் எது பிழையானது,
1. உயிருள்ள பொருட்களை பார்வையிட முடியாது
2. விம்பங்கள் நிறம் கொண்டதாகக் காணப்படுவதில்லை
3. புறக்காந்தப்புலம், இதன் காந்தப்புலத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை
4. இதன் உருப்பெருக்கம் 500000 மடங்கிலும் பெரியது
5. இதன் பிரிவலு 0.2nm ஆகும்.


(07) பின்வருவனவற்றுள் எது "Biome" (உயிரினத்தொகுதி) என்பதற்கு உதாரணமாக அமையாதது?
1. Tundra 2. அயனமண்டல மழைக்காடு 3. பாலைவனம்
4. குளம் 5. வளிமண்டலம்

(08) பின்வருவனவற்றுள் எது Spirogyra Fucus என்பவற்றிற்கு இடையிலுள்ள Taxon தொடர்பை எடுத்துக்காட்டுகின்றது. இரண்டும்,
1. ஒரே இராச்சியம், வெவ்வேறு கணம்
2. ஒரே கணம், வெவ்வேறு வகுப்பு
3. ஒரே வகுப்பு, வெவ்வேறு வருணம்
4. ஒரே வருணம, வெவ்வேறு குடும்பம்
5. ஒரே குடும்பம், வெவ்வேறு சாதி

(09) fucoxanthine என்பது ஒரு கபில நிறப்பொருள். இது பின்வரும் எந்த அங்கியில் காணப்படும்.
1. Chlamydamonas 2. Chlorella 3. Euglena
4. Fucus 5. Mucor

(10) பின்வரும் சிறப்பியல்புகளில் எது Cycas தாவரத்திற்கு உரியது அல்ல,
1. வித்துக்கள், பழங்களினுள் வைக்கப்பட்டிருப்பதில்லை
2. காழ் இழையத்தில் காழ்கலன் காணப்படுவதில்லை
3. உரிய இழையத்தில் தோழமைக்கலம் காணப்படும்
4. "கூம்பு" என்ற கட்டமைப்பை உருவாக்கல்
5. வேர், ஆணி வேரின் அமைப்பை உடையது

கீழ்தரப்பட்ட வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டு 12, 13, 14 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.





(11) மேற்தரப்பட்ட குறுக்கு வெட்டுமுகத் தோற்றம் ஒரு குறிப்பிட்ட உடல் அமைப்புத்திட்டத்தைக் காண்பிக்கும் விலங்கு ஒன்றின் உடலின் ஊடான குறுக்குவெட்டுமுகம் ஆகும். அங்கு "X" எதனைக் குறிக்கும்.
1. குடற்குழி
2. போலி உடற்குழி
3. உடற்குழி
4. உணவுக்கால்வாயின் உள்ளிடம்
5. இடைப்பசை

(12) X காணப்படும் விலங்குக்கூட்ட வகை,
1. Platyhelminthes
2. Cnidaria
3. Annelida
4. Arthropoda
5. Nematoda

(13) X இனுள் காணப்படுவது பின்வருவனவற்றுள் எது?
1. உடல் பாய்பொருள்
2. புடைக்கலவிழையம்
3. குருதி
4. எதுவும் அற்ற வெளி
5. பசைத்தன்மையுடைய பதார்த்தம்

(14) தரப்பட்ட உருவம் காண்பிக்கும் அங்கி உள்ளடக்கப்படுவது,



1. Asteroidea
2. Crinoidea
3. Holothuriodea
4. Echinoidea
5. Amphinura

(15) பின்வரும் தாக்கங்களில் எது நேரடியாக பெருமளவு ஒளிச்சக்தியின் பயன்பாட்டுடன் நடைபெறும்?
1. பஞ்சணையில் காபன் பதித்தல்
2. NADP மூலக்கூறு தாழ்த்தப்படுதல்
3. குளோரோபில் பதியப்பட்ட மென்சவ்விலிருந்து இலத்திரன் விடுவித்தல்
4. ATP தொகுப்பு
5. PGAL மூலக்கூறு RuBp ஐப் புத்துயிர்ப்பித்தல்

(16) $C_4$ தாவரங்களில் ஒளித்தொகுப்பு தொடர்பாக பிழையான கூற்று எது?
1. வரள் நிலத்தாவரங்களான சோளத்தில் நடைபெறும்
2. இருவகையான பச்சையவுருமணியுடன் தொடர்புடையது.
3. இலைநடுவிழையம் கட்டுமடல் கலங்கள் இரண்டும் பங்குகொள்ளும்
4. மாப்பொருள் தொடர்புபட்டுள்ளது.
5. அதிகளவு உற்பத்தி பெறப்படும்.

(17) காற்றுச்சுவாவத்தில், ஒரு மூலக்கூறு பைருவேட், KREB'S வட்டத்திற்கு உள்ளாகும் போது பின்வருவனவற்றுள் எந்த விளைவுகள் உருவாகும்.
1. $4NADH_2$ $3CO_2$ /ATP /$FADH_2$
2. $3NADH_2$ $4CO_2$ 2ATP $FADH_2$
3. $2NADH_2$ $3CO_2$ 1ATP $2FADH_2$
4. $1NADH_2$ $2CO_2$ 2ATP $2FADH_2$
5. $3NADH_2$ $2CO_2$ 1ATP $1FADH_2$

# கல்வி மறுசீரமைப்பு ஆலோசனைக்குழு ஓகஸ்ட் 3ஆம் திகதி முதல் கூடவுள்ளது

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வி மறுசீர்மைப்பு மற்றும் புதிய கல்வி சட்ட மூலம் தயாரித்தல் போன்றவை தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட ஆலோசனைக் குழு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி முதல் பாராளுமன்றத்தில் கூட்டங்களை நடத்தவுள்ளது.

பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் காலை 9.30 மணிமுதல் மாலை 4 .30 மணிவரை ஆலோசனைக் குழுக்கூட்டம் நடைபெறும் என்றும் மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக இந்தக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் கூறுகையில்,

கல்வித்துறையில் முழுமையான மறு சீரமைப்பு மேற்கொள்ளும் பொருட்டு பாராளுமன்ற விசேட ஆலோசனைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி முதல் கூட்டங்களை நடத்தவுள்ளது. இதற்கு கல்வித்துறை நிபுணர்கள், விரிவுரையாளர்கள் தொழில் சார் நிபுணர் கள், மதத்தலைவர்கள், தொழிற்சங்கங்கள் , அதிபர்கள் , ஆசிரியர்கள் என அனைவரும் தமது யோசனைகளையும் அபிப்பிராயங்களையும் முன் வைக்க முடியும்.

மிக விரைவில் கல்விக் கட்டமைப்பில் மறுசீர்மைப்பை கொண்டு வர வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

முக்கியமாக தற்போதைய கால கட்டத்துக்கு ஏற்றவாறும் உலக நிலைமைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையிலும் கல்வி மறு சீரமைப்பு அமைய வேண்டும் எனவும் ; 1929ஆம் ஆண்டுக்கு பின்னர் தற்போது தான் கல்விக்கட்டமைப்பில் கட்டமைப்பு மாற்றங்கள் இடம்பெறப்போகின்றன.

எனவே பல்வேறு வேலைத்திட்டங்களை மேற் கொள்ள வேண்டியுள்ளது.

இன்னும் மூன்று மாதங்களில் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் பொதுவான இணக்கப்பாட்டை தேசிய மட்டத்தில் ஏற்படுத்த முடியும் என்று நம்புகின்றோம்.

அந்த வகையில் விரைவில் புதிய சட்ட மூலத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வரலாம். (6)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு

யாழ் . மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமைபுரியும் முல்லைத்தீவு வலய பாடசாலை ஆசிரியர்கள் ஜுலை மாத சம்பளப் பத்திரத்தில் கையொப்பம் இடுவதற்கு எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) யாழ்ப்பாணம் மேலதிக மாகாண கல்விப் பணிமனையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள் தங்களது நிரந்தர பாடசாலையில் தமது சம்பளத்தை பெற்றுக் கொள்வதுடன் , உடனடியாகவே கடமையையும் பொறுப்பேற்குமாறு முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளர் மா. தேவேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (6)

# அரசாங்கத்தின் பொறிக்குள் ரணில் சிக்கக்கூடிய அபாயம்?

## ஐ.தே.க.அச்சம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொறியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க சிக்கக் கூடிய அபாயம் காணப்படுவதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பில் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது.

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் எழுந்துள்ள எதிர்ப்புகளை சமாளிக்கும் நோக்கில் அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.


நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால்; தற்போது நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமையை அறிமுகப்படுத்த முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளதுடன் நிறைவேற்று அதிகார பிரதமர் முறைக்கும் தமது கட்சி கடும் எதிர்ப்பை வெளியிடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ அதீத அதிகாரங்களை கொண்டிருக்கும் ஓராட்சி முறைமைக்கு தமது கட்சி ஆதரவளிக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தங்களின் மூலம் நிறைவேற்று பிரதமர் ஆட்சி முறைமை ஒன்றை உருவாக்கும் அரசாங்கத்தின் சூழ்ச்சிப் பொறியில் ஐக்கிய தேசியக் கட்சி சிக்கிக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் கூட்டணி கட்சியான ஜே.வி.பி. நாடு முழுவதிலும் பிரச்சாரங்களை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# முதலாமாண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னத்தம்பி நடேசமூர்த்தி
(J.P)

(பாதுகாப்பு உத்தியோகத்தர்,
இலங்கை வங்கி, அச்சுவேலி)

மலர்வு 1954.07.22

உதிர்வு 2009.06.25

காலத்தால் அழியாத காவிய நாயகனே
காலதேவன் உமையழைத்து ஆண்டொன்று
சென்றாலும் கூட நீங்கவில்லை துயரங்கள்!
பாரினில் வாழ்ந்த பண்பான மானிடனே
வெற்றிலை வாய்ச் சிரிப்பு மன்னவனே
காலத்தின் கோலம் தான் கணக்கிலில்லையே!
சேனைக்குகந்த மந்திரி போல் வங்கியில்
அனைவரையும் புன்சிரிப்பால் ஆதரித்த
உத்தமரே உன் வாழ்வு மோட்ச முற்றதுவோ!
உண்மையான உழைப்பில் உன்னதம் கண்டிட
ஊராரின் நெஞ்சமதில் உறவுடன் வாழ்ந்திட
முகாரி இசை மழை பொழிய விடை பெற்றாயோ!
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன–ஐயா
உம் அன்பு , பண்பைப் போல் வருமா
இமைக்க மறுக்குதையா விழிகள்!
ஆறவில்லை மனத்துயரம் சற்றேனும்
காயவில்லை எம் நனைந்திடும் கன்னங்கள்
எந்நாளும் உம்துயரம் எம் நெஞ்சில்!

*“உம் ஆத்மா சாந்தியடையட்டும்”*

இங்ஙனம்
குடும்பத்தினர்.

ஆஸ்பத்திரிவீதி, தோப்பு, அச்சுவேலி.

(சி/634)

# அனுராவின் சொத்துக்களை பங்கீடு செய்வதில் சர்ச்சை

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் சகோதரரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அனுர பண்டாரநாயக்கவின் சொத்துக்களை பங்கீடு செய்வதில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது.

பண்டாராநாயக்கவின் உயில் தொடர்பில் ஏற்கனவே பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஹொரகொல்ல பாரம்பரிய வீடு உள்ளிட்ட கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக் களுக்காக கொழும்பு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் அவரது சகோதரி சுநேத்திரா பண்டாரநாயக்க ஆகியோர் இந்த வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (6)

# அருகி வரும் கண்டல் தாவரங்களை நடுவதற்கு நடவடிக்கை

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் வடக்கு -கிழக்கு வாவிகளில் காணப்படும் கண்டல் தாவரங்கள் அழிவடைந்து அருகி வருகின்றன. இதனைத் தடுக்க கண்டல் தாவரங்களை நடுவதற்கான நடவடிக்கைகளை கடற்தொழில் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு பகுதியாக மட்டக்களப்பு, அம்பாறை , திருகோணமலை மாவட்டங்களில் உள்ள வாவிகள் மற்றும் களப்புகளில் கண்டல் கன்றுகளை நடும் நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்டத்தின் கடற்றொழில் அமைச்சின் பிரதிச் செயலாளர் டெமங்கோ ஜோர்ஜ் தெரிவித்துள்ளார்.

கண்டல் தாவரங்கள் நடும் நடவடிக்கைகள் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ,

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் நகரப்பகுதி, வாகரைப்பகுதி மற்றும் முகத்துவாரத்தில், இருந்து கிட்டங்கி வரை உள்ள பகுதிகளில் கண்டல் தாவரங்கள் நடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நடவடிக்கையை பல அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசாங்க அதிபரின் வழிகாட்டலுடன் மேற்கொள்கின்றதோடு தற்போது திருகோணமலை மூதூர் ,கிண்ணியா ஆகிய பகுதிகளில் மிகவும் சிறப்பான முறை யில் இந்த கண்டல் தாவரங்கள் நடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் வடக்கிலும் கண்டல் தாவரங்கள் நடும் நடவடிக்கை செயற்படுத்தப் படவிருக்கிறது. (6)

# முல்லைத்தீவிற்கான மின்சார விநியோகம் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பிரதான மின்சாரப் பரிவர்த்தனைக் கட்டமைப்பு மக்களுக்காக இன்று ஆரம்பித்து வைக்கப் படவுள்ளதென இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

மீள்குடியமர்த்தப்படும் மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எதிர்காலத்தில் இந்தக் கட்டமைப்பினால் விநியோகிக்கப்படும் மின்சார அலகுகளையும் அதிகரிக்க முடியுமென மின்சார சபையின் தலைவர் வித்யா தில்ருக் அமரபால தெரிவித்தார்.

இன்று கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்திற்கான மின்சாரப் பரிவர்த்தனைக் கட்டமைப்பையும் இயங்கச் செய்வதற்கு எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தலைமையில் ஏனைய அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர்களின் பங்குபற்றலுடன் வைபவமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மின்சார சபையின் தலைவர் மேலும் கூறினார். (6)

# தமிழில் லொத்தர் சீட்டுக்கள்

தேசிய அபிவிருத்தி லொத்தர்சபை சனிக்கிழமை அதிஷ்டம் மற்றும் அபிவிருத்தி அதிஷ்டம் ஆகியவற்றை தமிழில் அச்சிட்டு வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

தமிழில், முஸ்லீம் வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று அபிவிருத்தி லொத்தர்சபைத் தலைவர் ஜெயலத் த.வி.திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழில் அச்சிடப்பட்ட சனிக்கிழமை அதிஷ்டச் சீட்டுக்கள் எதிர்வரும் 17ஆம் திகதியும் அபிவிருத்தி அதிஷ்டச் சீட்டுக்கள் எதிர்வரும் 20 ஆம் திகதியும் வெளியிடப் படவுள்ளதாகத் தெரிவிக்கபடுகிறது. (6)

# சமய விழுமியங்களையும் பொருளாதாரத்தையும் சமகாலத்தில் கட்டியெழுப்புவதே எமது இலக்கு

## பிரதமர் தெரிவிப்பு

அனைத்து மதங்களும் சகோதரத்துவத்தை வலியுறுத்துவதால் நாம் எவரையும் எதிரியாகப் பார்க்கவோ அல்லது எவருடனும் குரோதம் பாராட்டவோ கூடாது என்று பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

சர்வமத விழுமியங்களையும் நாட்டின் பொருளாதாரத்தையும் சமகாலத்தில் மேம்படுத்துவதே எமது நோக்கம் எனவும் கூறியுள்ளார்.

ஓமந்தை பரண் நாட்டாங்கல் கிராமத்தில் அரசாங்க செலவில் நிர்மாணிக்கப்பட விருக்கும் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்று கையில்,

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டில் சமய விழுமியங்களையும் பொருளாதாரத்தையும் சம காலத்தில் மேம்படுத்துவதே எமது இலக்காகும். இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்த அடிப்படையும் தான் சர்வமத வழிபாட்டுத் தலங்களை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது.

நான் எட்டு இந்து ஆலயங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றேன். இதில் மூவாயிரம் அடிகள் உயரமான மலையில் ஒரு இந்துக் கோயில் அமைக்கப்படவிருக்கின்றது என்று தனது உரையை நிறைவு செய்தார். (6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆமணக்கு

Botanical Name -Ricinus communis
Family - Euphorbiaceae
Engl - Castor oil plant
Sinh- Erandu

இத்தாவரம் கிழக்கு ஆபிரிக்க பிரதேசத்தில் காணப்படும் ஒன்றாகும். பசுமை மாறாத புதர்ச் செடி அல்லது சிறு மரமாக 10 மீற்றர் உயரம் வளரக் கூடியதும் பல பருவத் தாவரமாகும். இளம் தண்டு புழை கொண்டது. வெண்மை வண்ணத்தினை தூவி மாவு போன்று படிந்திருக்கும்; இலைகள் நீண்ட காம்புடையவையாக தோற்றம் கொண்டது.

காம்பு புழை கொண்டது; காம்பின் அடியில் சுரப்பி கொண்டது; கை வடிவ அமைப்பைக் கொண்டதாகும். மடல் பிளவுற்று காணப் படும் விளிம்பு பற்கள் போன்று காட்சிய ளிக்கும்.

மலர்கள் நீண்ட , ஆண்மலரில் மகரந்தத் தாழ்கள் பல கற்றையாக காணப் படுகின்றன ; பெண் மலரில் சூல் பை 3 அறைகளை கொண்டது; சூல் முடியானது ஒளிரும் சிவப்பு வண்ணம் கொண்ட , கவர்ச்சியான பகுதியாகும்.

கனிகள் வெடி கனியாகவும் 3-2 பகுதி கொண்ட கனி, கோள வடிவானது. முட்கள் இருக்கும். விதையானது முட்டை வடிவானதும்; மிருதுவானதுமாகும்; விதையுறையானது கறுப்பு வண்ணத்தில் அடர் சாம்பல் நிறக் கோடுகள் , புள்ளிகள் (Mottled) கொண்டது.

**இனவிருத்தியும் , பரம்பலும்:**

இது ஓர் எண்ணெய் வளமுள்ள பயிராகும். இப்பயிர் பல இடங்களில் பரவி காணப்படுவதற்கு ; அதன் ஆழமான வேர்த் தொகுதியும் , விரைவான வளர்ச்சி வீதமும் , வரட்சியைத் தாங்கும் தன்மையுமே காரணமாகும். இதன் விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பயன்கள்:**

ஆமணுக்கு பல வகைகளில் உண்டு. அவையாவன ; காட்டாமணக்கு , நாட்டாமணக்கு , கடலாமணக்கு , எலியாமணக்கு, முத்தாமாணக்காகும்.

மேற் கூறப்பட்டுள்ளது ஆமணக்கு முத்தாமணக்காகும். இதன் விதையிலிருந்து



ஆமணக்கு எண்ணெய் எடுத்த பின்பு கிடைக்கும் விதைச் சக்கை நஞ்சாகும். இவ் எண்ணெயை முற்காலத்தில் பிள்ளை வளர்த்தி என்றே கூறுவர்.

உடலுக்கு இந்த நெய் வெப்பம் தந்தாலும்,குளிர்ச்சியை மீண்டும் தரவல்லது. குடலை தூய்மையாக்கி இளக்கமாக வைக்கும் . அத்துடன் குடற் புழுவை அகற்றும் , மலச்சிக்கலை போக்கி ஈரல் கோளாறை நீக்கும் தன்மையுடையது.

✸ முத்தாமணக்கு தளிரை அரைத்து 10 கிராம் அளவு தேங்காய்ப்பால் 10 மில்லியில் கொடுத்து வரவும். இவ்வாறு 4 நாட்கள் வழங்கி வரவும். அல்லது ; முத்தாமணக்கு இலை மற்றும் மஞ்சள் கரிசலாங்கண்ணி சம அளவில் எடுத்து அரைத்து 10 -15 கிராமில் 200 மில்லி பசுப்பாலில் கலந்து தினமும் ஒரு வேளை 7 நாட்கள் சாப்பிட்டு வர காமாலை நீங்கும்.

✸ ஆமணக்கு எண்ணெயை உணவில் தினமும் சேர்த்தால் மலச்சிக்கல் உண்டாகாது. சொறி, சிரங்கு , தேமல் , தலைவழி ஆகியவை எம்மை அணுகாது. குடலானது இளகிக் காணப்படும்.

✸ இதன் இலைகலை வதக்கி தாங்கக் கூடிய சூட்டில் பாலூட்டும் தாய்மார் மார்பில் பற்றிட பால் சுரக்கும் தன்மையை அதிகரிக்கச் செய்யும்.

✸ முலைக்காம்புப் புண் , முளை வெடிப்பு இவைகளுக்கு ஆமணக்கு எண்ணெயை துணியில் நனைத்து போட்டு வர குணமாகும்.

✸ உடம்பில் மேல் தோல் உராய்ந்து குருதிக் குழம்பு ஏற்பட்டால், ஆமணக்கு எண்ணெயை தடவ எரிவு நீக்கும்.

✸ ஆமணக்கு நெய் ஒருபங்கு , நல்லெண்ணை இரண்டு பங்கு சேர்த்து தலை முழுகி வர வலிப்பு நோய் தணியும்.

✸ ஆமணக்கு வேர் 35 கிராம் எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 ஆக வற்றக் காய்ச்சி 30 மில்லியளவு காலை , மாலை குடிக்க வாத நோய்கள் யாவும் தணியும்.

✸ கண்கள் ,மருந்துகளில் வேகத்தாலும் , தூசுகள் விழுந்தாலும் அருகிச் சிவப்பின் சிற்றாமணக்கு எண்ணெய்யும் , முலைப் பாலும் கூட்டி குழைத்து கண்ணில் விட சிவப்பு மாறி அருகல் குணமாகும்.

✸ ஆமணக்கு இலையை சிறிதாக அரிந்து துவரம் பருப்பும் சேர்த்து , கீரையாக உபயோகித்தலும் உண்டு.இதனால் மலம் இளகி குடல் சுத்தமடையும்.

✸ பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய்

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

காலங்களில் சரியானமுறையில் இரத்தப் போக்கு ஏற்படாமல் இருந்தால் இதன் இலையை நெருப்பில் இளஞ்சூடு செய்து அடிவயிற்றுப் பகுதிக்கு மேல் பகுதியில் போட்டால் சிறந்த நிவாரணம் கிடைக்க வாய்ப்புண்டு.


ஆமணக்கு விதையை இடித்து குழந்தைகள் தவறுதலாக பயன்படுத்துவார்கள். இந்த விதை இடித்து வரும் சக்கையானது அதிக நஞ்சுத் தன்மை கொண்டது.

எனவே குழந்தைகள் , சிறியவர்கள் இருக்கும் இடத் தில் விதைகளை வைக்க வேண்டாம். விதை யிலிருந்து பெறப்படும் எண்ணெயில் நஞ்சுத் தன்மை கிடையாது.

39.பின்வருவனவற்றுள் எது அழுக்கல்வளரிக்குரிய உணவுச்சங்கிலி,
1.தாவரப்பிளாந்தன்→விலங்குப் பிளாந்தன்→மீன்
2.உக்கிய இலைகள் →மண்புழு→பறவைகள்
3.புல்→மான்→சிங்கம்
4.நெல்→எலி→பாம்பு
5.மாடு→தெள்ளு→காகம்

40.பின்வரும் பக்ட்ரீயாக்களில் அகவித்திளை உருவாக்குவது,
1.Lacto bocillus
2.clostridium
3.Chromatium
4.Thio bacillus
5.E,Coli

40.கீழுள்ள வரிப்படம் குறித்த ஒரு புல் நில்தில் சக்திப்பாய்ச்சலைக் குறிக்கின்றது,




1) A 2) B 3) C 4) D 5) E


42. Plasmodium vivaxஇன் வாழ்க்கை வட்டத்தில் புணரிக்குழியங்கள் தோன்றுவது,
1.நுளம்பின் இரைப்பையில்
2.நுளம்பின் வாயுறுப்பில்
3.மனிதனின் செங்குழியத்தில்
4.மனிதனின் ஈரலில்
5.மனிதனின் குருதித்தரவவிழையத்தில்

43.உணவு பழுதடைதலின் பொழுது ஏற்படும் இரசாயன மாற்றம் அல்லாதது எது?
1. புரத உணவு அழுகல் அடைதல்
2.இலிப்பிட் உணவு பாண்டல் அடைதல்
3.காபோவைதரேட் நொதித்தலுக்கு உள்ளதால்
4.உணவில் நச்சுப்பதார்த்தங்கள் திரளல் அடைதல்
5.உணவின் இழைய அமைப்பில் மாற்றம் ஏற்படுதல்

44. கீழ் தரப்பட்டவற்றில் சில நுண்ணங்கிகளும் அவற்றினால் மேற்கொள்ளப்படும் இலிங்கமில் இனப்பெருக்க முறைகளும் தரப்பட்டுள்ள பிழையானது எது?

| அங்கி | இலிங்கமில் இனப்பெருக்க முறை |
|---|---|
| 1.Nocardia | துண்டுதல் துண்டாதல் |
| 2.Nostoc | அசைவிலி உருவாக்கல் |
| 3.Mucor | வித்திக்கலன் வித்தி உருவாக்கம் |
| 4.Aspergillus | தூளிய வித்தி |
| 5.பெனிசிலியம் | துண்டு துண்டாதல் |

45. கீழுள்ள வரைபடம் இன் மாதிரியுரு, கீழுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.P,Q,R,S,T என்பவற்றில் cepsomeres இனால் ஆக்கப்பட்டிருந்தது.




1. P 2.Q 3.R 4.S 5.T

46.கிளைக்கோ பகுப்பின் போது பின்வருவனவற்றுள் எது உருவாக்கப்படுவது இல்லை,
1.2 NADH 2. 2 பைருவேற்று 3. 2 $H_2O$ 4.2 ATP 5. 2 ADP

47.பின்வருவனவற்றில் எது எளிய செதில் மேலணியால் படலிடப்பட்டு இருக்கும்,
1.வியர்வைச்சுரப்பி 2.சிறுநீரபை
3.வாய்க்குழியின் சுவர் 4.களத்தின் உட்பகுதி
5.சிற்றறை

48.குடி நீரில் நுண்ணங்கிகளின் மாசாக்கம் ( Microbiological) ஏற்பட்டிருப்பதை அறிவதில் பயனுடைய நுண்ணங்கி இனம்,
1.*Clostridium botulium*
2.*Euglena*
3.*Escherichia coli*
4.*Amoeba*
5.*Microcystis*

49. இத்தாய் இத்தாய் என்னும் தசைகள் என்புகளைப் பாதிக்கும் நோயை ஏற்படுத்தக்கூடிய மாசுபொருள்,
1.Hg 2.Cd 3.$NO_3$ 4.Pb 5.As

50. செயற்கையான முறையில் இறால்களில் இனப்பெருக்கத்தைத்தூண்டுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை
1.கபச்சுரப்பி பிரித்தெடுப்பின் உட்செலுத்துதல்
2.கூட்டுக்கண்ணை அகற்றுதல்
3.நீர்த்தடாகத்தின் உவர்த்தன்மையை குறைவடையச் 'செய்தல்
4.நீர்த்தடாகத்தில் பிளாந்தன்களை அதிகரிக்கச் செய்தல்
5.தடாகத்தின் நீருடன் அயடின் சேர்த்தல்

51-60 வரையுள்ள வினாக்கள் பின்வரும் விடைகளை அடிப்படையாகக் கொண்டவை

| I | II | III | IV | V |
|---|---|---|---|---|
| A,B,D சரி | A,C,D சரி | A,B மட்டும் | C,D மட்டும் | வேறு விடை அல்லது சேர்க்கை' |

51. முன்ணாண் நரம்பில் வயிற்றுப்புற வேர் வெட்டப்படுமானால் யாது நடைபெறும்
A வாங்கி தூண்டப்பட்டாலும் எவ்வித மாற்றத்தையும் உணர முடியாது
B முதுகுப்புற வேருககு தூண்டல் கொடுக்கப்பட்டால் துலங்கலைக்காட்ட முடியும்
C வங்கி தூண்டப்பட்டாலும் எவ்வித துலங்கலையும் காட்ட முடியாது
D வயிற்றுபுற வேரின் வெட்டப்பட்ட முனையில் தூண்டல் கொடுக்கப்படின் துலங்கல் ஏற்படலாம்
E வாங்கியில், தூண்டலை உணரும் தன்மை இழக்கப்படும்.

52. குடித்தொகை ஒன்றில் குறித்த ஒரு பரம்பரை அலகின் அதிர்வெண் மாற்றமடைதல்
A விகாரம்
B இயற்கைத்தேர்வு
C பரம்பரை அலகு கடத்தப்படல்
D பரம்பரை அலகுப் பாய்ச்சல்
E எழுந்தமானமான இனக்கலப்பு

53.பின்வரும் நோய்களில் எது /எவை பரம்பரையலகு விகாரத்தினால் பெறப்படுவது,
A Thalasemia
B Haemophilia
C Down s syndrome
D Kline felters syndrome
E Turners syndrome

54.பின்வருவனவற்றுள் எது / எவை புறத்தோற்படை உற்பத்திக்குரியது
A வெண்குருதிக்கலம்
B சிற்றிடை இழையம்
C நீள்வழையமைய இழையம்
D பரிவாகக் கீழ்
E மார்புப்படை

55.பின்வருவனவற்றுள் எது /எவை தொடர்மாறலுக்குரியவை
A மனிதனின் தோலின் நிறம்
B மனிதனின் புத்திக்கூர்மை
C குருதிக்குகூட்டவகை
D இலிங்கத்துணைப்பால் இயல்புகள்
E உயரம்


56.Bacteria, Cyano bacteria ஆகிய இரண்டிற்கும் இடையிலுள்ள ஒற்றுமையை எடுத்துக்காட்டும் கூற்றுக்களில் பிழையானவை எது /எவை
A இரண்டு ஒளித்தொகுப்பை மேற்கொள்ளக்கூடியவை
B இரண்டு மென்சவ்வால் சூழப்பட்ட புன்னங்களைக் கொண்டிருப்பதில்லை
C இரண்டிலும் Plasmid காணப்படும்
D இரண்டிலும் பல்லினச்சிறப்பை காணப்படும்
E இரண்டும் தனிக்கலத்தால் ஆக்கப்பட்டிருக்கும்.

57. பின்வருவனவற்றுள் எது / எவை மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியைக் காணப்பிப்பதில்லை
A பழங்கள்
B ஒருவித்திலை தாவர இலைகள்
C இரு வித்திலைத்தாவர இலைகள்
D ஆண்டுத்தாவரம்
E பல்லாண்டுத்தாவரம்

58. பாரம்பரிய குறைபாடுகளை அறிந்து கொள்ளும் பொருட்டு செய்யப்படும் சோதனையில் பரிசோதிக்கப்படும் மாதிரி எது / எவற்றில் இருந்து பெறப்படும்
A முதிர்மூலவுருவின் குருதியில் இருந்து
B முதிர்மூலவுருவை சூழவுள்ள பாய்பொருள்
C தாயின் குருதியில் இருந்து
D கோரியோன் சடைமுளையில் இருந்து
E சூல்வித்தகக் கலங்களில் இருந்து

59.பின்வரும் கூற்றுக்களில் **TAXA** பற்றி சரியானது
A ஒரு கணம் பல வகுப்புகளைக் கொண்டிருக்கலாம்
B ஒரு வகுப்பு எப்பொழுதும் ஒரு வருணம் ( Order) மட்டும் உடையது
C மிகவும் தமிழ் மட்டத்திலுள்ள **TAXON** இனம் என்பதாகும்
D ஒரே குடும்பத்திலுள்ள அங்கிகளுக்கு இடையிலுள்ள நெருங்கிய கூர்ப்புத் தொடர்பு ஒரே கணத்திலுள்ள அங்கிகளுக்கு இடையிலுள்ள கூர்ப்புத் தொடர்பிலும் மிக நெருக்கமானதாகும்.
E ஒரு சாதியிலுள்ள அங்கிகளுக்கு இடையில் ஒற்றுமைகள் ஒரு இனத்திலுள்ள அங்கிகளுக்கு இடையிலுள்ள ஒற்றுமையிலும் அதிகம்

60.தூண்டப்பட்ட பரவுகை தொடர்பாக சரியானது எது / எவை
A இது ஒரு மந்தமான அசைவு
B செறிவுப் படித்திறன் ஏற்படும் பொழுது நடைபெறும்
C இது ஒரு உயிர்ப்பான கொண்டு செல்லல் முறை
D மூலக்கூறுகளின் செறிவு கூடிய இடத்தில் இருந்து மூலக்கூறுகள் செறிவு குறைந்த இடத்தை நோக்கி மூலக்கூறுகள் பரவல் அடையும்
E காவிப்புரதங்கள் பங்கு கொள்ளும்.




குடும்பநல உத்தியோகத்தர் சங்கமும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கமும் இணைந்து குடும்பநல உத்தியோகத்தர் ச.தர்சிகாவின் மர்ம மரணம் தொடர்பான விசாரணையில் உரிய தீர்வை வ்ழங்கக்கோரி நேற்று யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இதில் குடும்ப நல உத்தியோகத்தர் பதாதை களை கையில் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை படங்களில் காணலாம்

# வவுனியா மாவட்டத்தில் 69 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியேற்றம்

## அரச அதிபர் பி.எம்.சாள்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.எம்.சாள்ஸ் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரையில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏறக்குறைய 69 கிராம சேவையாளர் பிரிவுகளில் நாங்கள் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் தற்போது மேற்கொண்டு வருகின்றோம்.

மகிழங்குளம் என்று அழைக்கப்படுகின்ற ஒரு கிராம சேவையாளர் பிரிவைத் தவிர ஏனைய கிராம சேவையாளர் பிரிவுகளில் நிலக்கண்ணி வெடி அகற்றப்பட்டு மக்கள் மீள் குடியேற்றத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் இந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறுபட்ட திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

இதுவரையில் பல்வேறு அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற திணைக்களங்களின் ஊடாக இவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான திட்டத்தை மாவட்ட அடிப்படையில் தீர்மானித்து அந்த அடிப்படையில் அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு தற்போது நான் வவுனியாவில் உள்ள சகல வங்கிகளோடும் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளேன்.

இந்த அடிப்படையில் இந்த வங்கிகளுக்கு 2 அல்லது 3 கிராமங்களை வழங்கி அவர்களுக்கு மிக குறைந்த வட்டியில் அவர்களுக்கான கடன் உதவியை வழங்கி அவர்களுடைய பொருளா தாரத்தை விருத்தி செய்வதற்கான திட்டமும் தற்போது வகுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார். (6-4)

# லொத்தர் விற்பனை முகவர்களாக இணைத்துக்கொள்வதற்கான பதிவுகள்

(சாவகச்சேரி)

ஊனமுற்றோருக்கான சுய தொழில் வாய்ப்பை மேம்படுத்தவும்; அதன் ஊடாக சமுகத்தில் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையினர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கமைய அவர்களை லொத்தர் விற்பனை முகவர்களாக நியமிப்பதன் மூலம் இவர்களுக்கான திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக முச்சக்கர நாற்காலிகளும் இவர்களுக்கு வழங்க ஏற்பாடாகியுள்ளது.

இத்திட்டத்தில் சேர விரும்பும் ஊன முற்றோர் அருகாமையில் உள்ள பிரதேச -செயலகங்களில் இயங்கும் சமூக சேவைகள் பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு தமக்குரிய விபரங்களைப்பெற்று பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-29)

# யாழ்.மாவட்டத்தில் முதல் முறையாக வடமராட்சி கல்வி வலயத்தினால் திறந்த பாடசாலை அங்குரார்ப்பணம்

(அல்வாய்)

யாழ்.மாவட்டத்தில் முதல் முதலாக வடமராட்சி கல்வி வலயத்தால் திறந்த பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இப்பாடசாலை கெருடாவில் கண்ணன் சன சமூக நிலையத்தில் மாலை நேர வகுப்புகளாகவும் சனி, ஞாயிறு வகுப்புகளாகவும் நடை பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

14 வயதிற்கு மேற்பட்ட கல்வியில் ஆர்வமுள்ள அனைவரும் இங்கு கல்வி கற்கலாம் என்பதுடன் இவர்களுக்கு தாய்மொழி, ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், சார்ந்த கல்வி என்பன போதிக்கப்படவுள்ளன.

இதன் இணைப்பாளராக கெருடாவில் இந்து கலவன் தமிழ் பாடசாலை அதிபர் து.அருந்த வராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இத்திறந்த பாடசாலையின் அங்குரார்ப் பணக் கூட்டம்நாளைகாலை 10.30மணிக்கு இணைப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரமத விருந்தினராக வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் வ. செல்வராசா கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இப்பாடசாலையில் 60 மணவர்கள் கற்பதற்கு பதிவு செய்துள்ளனர்.இதற்கு முழுப் பொறுப்பாக முறைசாரக் கல்விப்பிரிவின் உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். இராசகுமாரன் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் கற்பிப்பதற்கு இளைப்பாறிய ஆசிரியர்கள் மற்றும் தொண்டு அடிப்படையில் கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். (6-19)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அச்சகத்தார் சம்மேளன நிறைவேற்றுக்குழுவினரின் ஏற்பாட்டில் வீரகேசரி நாளிதழ் இணைந்து வழங்கும் கருத்தரங்கு மற்றும் ஒரு நாள் வேலைத்திட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை நல்லூர் இளம் கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6-4)

# தமிழகத்தை மீட்க அ.தி.மு.கவுடன் சேர்ந்து போராடுவோம்-வைகோ

(மதுரை)

தமிழகத்தை மீட்க அ.தி.மு.க.வுடன் சேர்ந்து போராட வேண்டும் என ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ பேசினார். மதுரையில் கட்சி நிர்வாகி இல்லத் திறப்பு விழா மற்றும் கொடியேற்ற விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு அவர்களது வீடுகளும் இடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

ஆயினும் தமிழ் மக்கள் வீடுகளில குடியேறுவர் எனவும் விரைவில் தமிழ் ஈழம் அமையும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை நிர்வாணப்படுத்தி கொடுமைப் படுத்துவதற்கு யார் தைரியம் கொடுத்தது. தமிழகத்தில் ரவுடியிசம், விலைவாசி உயர்வு, சட்டம், ஒழுங்கு, சீர்கேடு மேலோங்கி உள்ளது எனவும் மேலும் இலவசம் மற்றும் போதைகளால் தமிழகம் தள்ளாடிக் கொண்டிருக்கிறது என்றும் இதிலிருந்து மக்களை மீட்க அ.தி.மு.க.வுடன் சேர்ந்து நாம் போராட வேண்டும் என்றும் அவர் பேசினார். (6)

# விவாகரத்து வழக்கு தொடர நடிகை சுகன்யாவுக்கு அனுமதி

(சென்னை)


நடிகை சுகன்யாவுக்கும் அமெரிக்காவை சேர்ந்த ஶ்ரீதரன் என்பவருக்கும் 2002 இல் அமெரிக்க நியூஜெர்சியில் திருமணம் நடந்தேறியது. 2003 ஆம் ஆண்டு இந்தியா வந்த சுகன்யா விவாகரத்து கேட்டு வழக்கு தொடர்ந்தார். கணவர் பதில் அளிக்காததால் 2004 இல் சென்னை குடும்பநல நீதிமன்றம் சுகன்யாவுக்கு விவாகரத்து வழங்கியது. இதை எதிர்த்து ஶ்ரீதரன் மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்தார்.

மனுவை நீதிபதிகள் எலிப்பி தர்மராவ் கே.கே.சசீதரன் விசாரித்து அமெரிக்காவில் திருமணம் நடந்திருந்தாலும் பெண் எந்த இடத்தில் வசிக்கிறாரோ அங்குள்ள நீதிமன்றத்தில் இந்து திருமண சட்டப்படி வழக்கு தொடர உரிமையுள்ளதெனவும் சுகன்யாவின் விவாகரத்து வழக்கை குடும்பநல நீதிமன்றம் விசாரித்து 2 மாதத்தில் முடிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தனர். (6)

# கடலுக்கு அடியில் உளவு பார்க்கும் ஆளில்லா நீர்மூழ்கிகள்

## இந்தியா வாங்குகிறது

(புதுடில்லி)



எல்லையோரம் உளவு பார்க்க ஆளில்லா உளவு விமானங்களை இந்திய இராணுவம் பயன்படுத்துகிறது. இந்த விமானங்கள் எதிரி நாட்டுக்குள் பறந்து சென்று கமராவில் இரகசியமாக படம் எடுத்துவிட்டு திரும்பும். இதை தரையில் இருந்தபடியே கணனி உதவியுடன் இயக்குவார்கள்.

இதே போன்று கடலுக்கு அடியில் கண்ணிவெடிகள் பொருத்தப்பட்டுள்ளதா? என்பதை கண்டறிய தானியங்கி நீர்மூழ்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நீர்மூழ்கிகள் சிறியதாக இருக்கும். அதில் உள்ள கணனிகள் உதவியுடன் இயக்கலாம். அதில் அதி நவீன கமரா மற்றும் சோனார் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கும்.

இந்த கருவி 500 மீற்றர் ஆழம் வரை சென்று கடலில் கண்ணிவெடிகள் இருக்கிறதா? கடலில் அடியில் ஏதாவது உளவு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதா என்பதை கண்டறியும். கடலுக்கு அடியில் 8 மணி நேரம் வரை இருக்கும்.

இந்த சிறிய நீர்மூழ்கிகளை வாங்க இந்திய கடற்படை முடிவு செய்துள்ளது. மொத்தம் 10 நீர்மூழ்கிகள் வாங்கப்படவுள்ளதுடன் மேலும் புதிய நீர்மூழ்கிகளை இந்தியாவிலேயே தயாரிக்கவும் கடற்படை திட்டமிட்டுள்ளது.

சிறிய நீர்மூழ்கிகளை விநியோகிக்கும் நிறுவனங்கள் அதை இந்தியாவில் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தையும் வழங்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (6-4)

ஒரு துருப்பிடித்த ஆணியை வெளியே எடுப்பதற்கு சுவரைக் கொஞ்சம் உடைத்தெடுக்க வேண்டும்.
-இத்தாலி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## போரை நடத்திய 'ஜனாதிபதி' அதிகாரமே இனப்பிரச்சினைக்குத் தீர்வையும் தர வேண்டும்

அரசியலமைப்பைத் திருத்தம் செய்வது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் ஆட்சி முறைக்கு இருவரும் உடன்பட்டுக் கொண்டதாகத் தெரிய வருகின்றது.

1977 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை இந்த நாட்டிற்குப் பெருங்கேடு விளைவித்தது.

கூடவே ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசியலில் தப்பிப் பிழைக்க முடியாத அளவுக்கு பின் தங்கிப் போனதற்கும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையே காரணமாயிற்று.

இந் நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் ஆட்சிமுறையை உருவாக்கி நாடாளுமன்றத்தின் பலத்தை நிலைநாட்ட முயற்சி செய்யப்படுகின்றது.

ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தேவை.

அந்தப் பலத்தைப் பெறுவதற்கு இதுவரை இருந்து வந்த தடைகள் வெட்டப்பட்டுள்ளன.

இந்தத் தடைகள் அறுபடுவதற்கு முப்பத்தி மூன்று ஆண்டுகள் செலவாக வேண்டியிருந்துள்ளது. இப்போதுதான் அதற்கான சூழமைவு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதால், மூன்றாவது தடவை ஜனாதிபதியாக முடியாத நிலைமை உள்ளது.

எனவே அரசியல் அமைப்பைச் சீர்திருத்தம் செய்வதன் மூலம் பிரதமர் என்ற பதவிக்கூடாக அதிகாரத்தை வைத்திருக்கக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது.

அதேநேரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் அடுத்த 30 வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கும் வாய்ப்பு அறவேயில்லை.

எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையிலிருந்து விடுவிப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால ஆரோக்கியத்திற்கு அவசியமானதாகும்.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்கு முடிவு கட்டும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

இங்குதான் முக்கியமான ஒரு விடயம் கேள்விக்குரியதாகின்றது. அதாவது நிறைவேற்று அதிகாரம் போரை நடத்தி அதனை முடித்து வைத்தது.

இந்த அதிகாரமே இனப்பிரச்சினைக்கும் தீர்வு கண்டாக வேண்டும். ஆனால் போரை முடித்து விட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்பாக பிரதமருக்கு அதிகாரம் வழங்கும் அரசியல் அமைப்பு கொண்டு வரப்படுமாகவிருந்தால், இனப்பிரச்சினை அடிபட்டுப் போகும் சந்தர்ப்பம் உண்டு.

ஆகவே இது தொடர்பில் தமிழ் சட்ட வல்லுநர்கள் நிலைமையை ஆராய வேண்டும்.

# திருவாசகத்தைத் தந்தருளிய மாணிக்கவாசகர் சுவாமிகள்

### இன்று அவரது குருபூசைத் தினமாகும்

தென்னிந்தியாவிலே மதுரையம்பதியிலுள்ள திருவாதவூரில் சம்புபாத சிவாசாரியார் சிவஞானவதி ஆகியோருக்குப் பிறந்த குழந்தை தான் திருவாதவூரர். அவருடைய குலத்துப் பிராமணர்கள் பரம்பரை பரம்பரையாகப் பாண்டிய அரசர்களுக்கு அமைச்சுத் தொழில் செய்துவந்தனர். திருவாதவூரரின் நல்லொழுக்கத்தையும் கல்வியறிவையும் அறிந்த பாண்டியமன்னன் அவரை தன் முதல் மந்திரியாக நியமித்தார். அத்துடன் அவருக்குத் **தென்னவன் பிரமராயன்** என்னும் பட்டமும் வழங்கினார்.

திருவாதவூரர் அமைச்சராகப் பணியாற்றிதுடன் அவருடைய சித்தம் சிவன்பால் இருந்தது. இவ்வாறு இருக்க கீழைக் கடற்கரையில் சிறந்த அராபியக் குதிரைகள் விற்பனைக்கு வந்திருப்பதை அறிந்த பாண்டிய மன்னன், அவற்றை பெற்றுக்கொள்ள பெருந்தொகை பொன்னையும், தேவையான ஆட்பலத்தையும் திருவாதவூரிடம் கொடுத்து அனுப்பினார்.

அவர் சென்ற வழியிலே திருப்பெருந்துறை ஆவுடையார் கோவில் என்னும் சிவத்தலம் அமைந்திருந்தது. அங்கு குருந்த மரம் ஒன்றின் நிழலில் அருட்குரவர், சீடர்கள் புடைசூழ அமர்ந்திருந்து அவர்களுக்கு ஞானஉபதேசம் செய்து கொண்டு இருந்தார். அவர் திருக்கரத்தில் சிவஞானபோதம் என்னும் நூலிருந்தது.

இக்காட்சியை கண்ட திருவாதவூர் அடிகள் அக்குரவரின் பாதங்களில் வீழ்ந்து தம்மை ஆட்கொள்ளும்படி பணிவுடன் வேண்டினார். அருட்குரவரும் அவருடைய சென்னியில் தம் திருவடிகளை வைத்து அவரை ஆட்கொண்டார். சற்குருவிடம் உபதேசம் பெற்றதும் இறையருளால் அருட்பாக்களைப் பொழியத் தொடங்கினார். அப்பாக்கள் மாணிக்கம் போன்ற சிறப்பும் உயர்வும் உடையவனாக இருந்தமையால் அவருக்கு **மாணிக்கவாசகர்** என்ற பெயர் சூட்டப்பட்டது.

மாணிக்கவாசகர் அமைச்சர் கோலத்தை களைந்து துறவுக்கோலம் பூண்டதால் தாம் குதிரை வாங்க வந்த நோக்கத்தையும் மறந்தார். அதற்காக மன்னனால் கொடுக்கப்பட்ட திரவியங்களை சிவனடியார் தொண்டிற்கும், சிவாலயத் திருப்பணிக்கும் செலவு செய்தார். இச்செய்தி கேட்ட அரசன் வெகுண்டதுடன் மதுரைக்கு வருமாறு ஏவலர்கள் மூலம் கட்டளை அனுப்பினான். அக்கட்டளையை மாணிக்கவாசகர் அருட்குரவருக்கு அறிவித்தார்.

குரவரும் உடனே மாணிக்கக் கல்லொன்றைக் கொடுத்து இதை மன்னிடம் கொடுத்து ஆவணி மூல நன்னாளில் குதிரைகள் அங்கு வரும் என்பதை கூறி மாணிக்கக் கல்லையும் அரசனிடம் கொடுக்கும் படி கூறி வழியனுப்பினார்.

மாணிக்கவாசகர் மதுரையை அடைந்ததும் இதுபற்றிய செய்தியை அறிவித்தார். அதனைக்கேட்ட அரசன் அமைதி அடைந்தான். ஆயினும் அரச அலுவலர்கள் குதிரைகளை தாம் திருப்பெருந்துறையில் காணவில்லை என்று அரசனுக்கு முறையிட்டனர்.

இதைக்கேட்ட மன்னன், மாணிக்கவாசகர் கொண்டு சென்ற திரவியம் முழுவதையும் அறவிடுமாறு தண்டலாளர்களுக்குப் பணிந்தான். அவர்களும் மாணிவாசகரை சிறையிலிட்டு துன்புறுத்திய போது ஆவணி மூல நாளும் வந்தது.

குதிரைக்கூட்டமும் மதுரைக்கு வந்தது. கம்பீரமுடைய அக்குதிரைகளை கண்டதும் மன்னன் அகமகிழ்ந்தான். மாணிக்கவாசகரை சிறையிலிருந்து விடுவித்தான். அன்று நள்ளிரவு புதிய குதிரைகள் எல்லாம் நரிகளாக மாறி அவை அங்கே நின்ற பழைய குதிரைகளை எல்லாம் கடித்தன.

இதனால் மதுரை மாநகரம் முழுவதும் குழப்பமடைந்தது. பரிகள் மாயமாய் நரிகளாக மாறியமை அரசனுக்கு பெருங் கோபத்தை ஏற்படுத்தியது. மாணிக்கவாசகரை வைகை ஆற்றுச்சுடுமணலில் நிறுத்தி நெற்றியில் கல்லேற்றி வருத்தும்படி மன்னன் தண்டாலருக்கு கட்டளையிட்டான்.

தன் அடியார் வருந்துவதை பொறுக்கமுடியாத திருவாலவாய் இறைவன் வைகையாற்றில் பெருவெள்ளம் பெருகச் செய்தார். இது இறைவனின் செயல் என்றுணர்ந்த அரசன் மணிவாசகரின் தண்டனையை நீக்கி மன்னிப்பும் கேட்டான்.

மாணிவாசகர் தம் அமைச்சுத் தொழிலிருந்து விலகித் தம்மை இறைபணிக்கு முழுமையாக அர்ப்பணித்தார் திருப்பெரும் துறைக்கு மீண்டும் சென்று அவர் ஞான முதிர்ச்சி பெற்றார்.

அதன் பின் பல தலங்களுக்குச் சென்று திருவாசகம் பாடினார். ஈற்றில் அவர் தில்லையை அடைந்தார். ஆனிமக நட் சத்திரதிலே இறைவன் பாதங்களை அடைந்தார்.

தி.கிருபாகரன்,
ஆசிரியர்
யாழ்/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்

# யாழ். மாவட்டத்தின் கால்நடை உற்பத்தி வளங்கள் யாழ். மக்களுக்கே பயன்படுத்தப்பட வேண்டும்

## கால்நடை அபிவிருத்திப்பிரதியமைச்சர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் உள்ள கால்நடை உற்பத்தி வளங்களை வேறு இடங்களுக்கு ஏற்றுமதி செய்யாமல் யாழ். மக்களுக்கே பயன்படுத்தக்கூடிய வகையில் அமையப்பெற வேண்டும் என யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கால்நடை அபிவிருத்தி பிரதி அமைச்சர் மித்திரிபால செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திருநெல்வேலி கால்நடைஉற்பத்தி நிலையத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்து பால் மா பவுடர்களை அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதனால் அதிகளவு செலவும் செய்யப்படுகின்றது. இவை எதிர்காலத்தில் தவிர்க்கப்படவேண்டுமாயின் கால் நடைகளின் உயரிய உற்பத்தி வளங்களை அபிவிருத்தி செய்து எமது நாட்டின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவேண்டும்

அவுஸ்திரேலியா கால்நடை உற்பத்தியில் எவ்வளவு விரைவாக வளர்ச்சி அடைந்ததோ அதேபோல் எமது தேசமும் வளர்ச்சி அடைய வேண்டும் எங்களுடைய சேவை எமது மக்களுக்கு சென்றடைய வேண்டும்.

வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தின் கீழ் மாவட்டத்தின் வறியவர்களுக்கான பசு வளர்ப்புத்திட்டம் கொண்டு வரப்பட்டது. அது உரியவர்களுக்கு விரைவாக சென்றடைய வேண்டும்.

இந்நிலையில் யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி நிலையத்திற்கும் பசு வளர்ப்புத்திட்டம் மூலம் நீண்ட நாட்களுக்கு பாலை பாதுகாத்து உற்பத்தி செய்வதற்கான செயற்றிட்டத்திற்கு நிதி பெற்றுத்தருமாறு யாழ். மாவட்ட கால்நடை உற்பத்தி நிலைய பொறுப்பதிகாரிகளினால் பிரதி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் நாம் இங்குள்ள முறைபாடுகளை அறிக்கையிட்டு அமைச்சர் தொண்டமானிடமும் ஜனாதிபதியுடனும் கலந்தாலோசித்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். இக் கலந்தாய்வுக் கூட்டத்தில் கால்நடை உற்பத்தி வடமாகாண பிரதி பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி வ.அமிர்தலிங்கம், மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிவநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (6-7)

## தொழில்களை இழந்துள்ள உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு நிவாரணம்

பல்வேறு பட்ட காரணங்களினால் தொழிலற்றுள்ள உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கவுள்ளது. அத்துடன் இவர்கள் சம்பந்தமான தகவல்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகளை சபை தற்போது ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக விண்ணப்பிக்கவுள்ள கைத்தொழிலாளர்கள் மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையில் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மதம்



பொருளாதார மதிப்பு இருக்கின்ற மதமே வெற்றி பெறும். ஆயிரக் கணக்கான ஒரேவித மதப் பிரிவுகள் ஆதிக்கத்திற்குப்பாடுபடலாம். ஆனால் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பவைகளே ஆதிக்கத்தை பெறுகின்றன. ஒரு இலட்சிய மதத்தின் நோக்கம் இந்த வாழ்விற்கும் உதவ வேண்டும்; மறு உலகிற்கும் வழி காட்ட வேண்டும். அதே வேளையில், மரணத்தை ஏற்க அது ஒருவனை ஆயத்தம் செய்யவும் வேண்டும்.

மதத்தைப் பற்றிக் கொண்டு சண்டையில் இறங்காதே. மதச் சண்டைகளும் வாதங்களும் அறிவின்மையின் அறிகுறி, தூய்மையும் அறிவும் வெளியேறி, இதயம் வளரும் போதே சண்டைகள் தொடங்கும்; அதற்கு முன்னால் அல்ல.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில்

# இனப்படுகொலைக் குற்றச்சாட்டில் பதிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதி



(திஹாக்)

ஆபிரிக்க நாடான சூடானின் ஜனாதிபதியாக ஓமர் அல்-பஷீர் உள்ளார். அங்குள்ள தார்பர் பகுதியில் உள்ள பழங்குடியின மலைவாழ் மக்கள் தங்கள் உரிமைகளுக் காக போராடி வருகின்றனர்.

அவர்களின் போராட்டத்தை சூடான் அரசானது இராணுவம் மூலம் அடக்கி வருகிறது. இந்த நிலையில் கடந்த 2003 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடந்த தாக்குதலின் போது, போராட்டத்தில் ஈடுபட்ட பர், மசாலித், ஷகாவா ஆகிய இன மக்கள் கொன்று குவிக் கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதி ஓமர் அல்-பஷீர் மீது நெதர்லாந்தில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் போர்குற்ற வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி மனிதாபிமானத்துக்கு எதி ராக இனப்படுகொலை செய்ததாக குற்றம் சாட்டி சூடான் ஜனாதிபதியை கைது செய் யும்மாறு கடந்தாண்டு உத்தரவு பிறப்பித்தார்.

இதை எதிர்த்து ஓமர் அல்-பஷீரின் சார் பில் அவரது சட்டத்தரணி லூயிஸ் மொரே னோ நகாம்போ கடந்த 4 மாதத்துக்கு முன்பு மேன்முறையீடு செய்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசார ணைக்கு வந்தது. இதை விசாரித்த நீதிபதிகள் அதிபர் ஓமர் அல்-பஷீர் மீது இனப்படு கொலை தொடர்பாக 3 குற்றச்சாட்டுகள் பதிவு செய்து கீழ் நீதிமன்ற அறிவிப்பை உறுதி செய்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கொன்று குவித்தது. அதன் மூலம் அப்பகுதி மக்களுக்கு மனரீதியாக வருத்தத்தை ஏற்படுத்தியது. மற்றும் அடக்குமுறையை பயன்படுத்தியது என்ற 3 குற்றச்சாட்டுகளை பதிவு செய்தனர்.

போர் குற்ற வழக்கு தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தில் இனப்படுகொலை குற்றச் சாட்டு பதிவு செய்யப்பட்ட முதல் ஜனாதிபதி இவர் தான் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## ஈரானில் செறிவூட்டப்பட்ட யுரேனியம் தயாரிப்பு

ஈரான் நாடு உலக நாடுகளின் மிரட்டலை மீறி 20 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை தயாரித்து உள்ளது. இதை ஈரானின் அணுசக் தித் தலைவர் அலி அக்பர் சலேகி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், யுரேனி யத்தை செறிவூட்டுவதை ஈரான் கைவிட வேண் டும் என்று உலக நாடுகள் அமெரிக்காவின் தலைமையில் வலியுறுத்தின. மின்சாரத்துக் காக என்ற பெயரில் நாங்கள் அணுகுண்டு தயாரிக்க இருக்கிறோம் என்று தான் அந்த நாடுகள் எங்களை எதிர்த்தன.

நாங்கள் அமைதி நோக்கத்திற்காக தான் அதை செறிவூட்டி இருக்கிறோம். அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் அணு உலைக் கூடத்துக்கான எரிபொருளை நாங்களே தயாரிப்போம் என்றும் தெரிவித்தார். (6-4)




# அணுவாயுதங்களை உற்பத்தி செய்யும் முனைப்புக்களில் ஈரான் ஈடுபட்டுள்ளது

## ரஷ்யா தெரிவிப்பு

அணுவாயுதங்களை உற்பத்தி செய்யும் முனைப்புக்களில் ஈரான் ஈடுபட்டுள்ளதாக ரஷ்யா முதல் தடவையாக அறிவித்துள்ளது.

அணுவாயுதங்களை உற்பத்தி செய்யும் செயன்முறைகளை நோக்கி ஈரான் நகர் வதாக ரஷ்ய ஜனாதிபதி டிமெட்டி மெத்வடேவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிற்கும் ஈரானுக்கும் இடையில் வலுவான இராஜதந்திர உறவுகள் காணப்ப டு வதுடன் இராணுவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இரு நாடுகளுக்கும் இடையில் சுமூகமான உறவுகள் காணப்படுகின்றன.

எவ்வாறெனினும் ஈரானின் அணுவாயு தக் கொள்கைகள் தொடர்பில் அண்மைக் காலமாக ரஷ்யா கடுமையான நிலைப் பாட்டை பின்பற்றி வருவதுடன் ஈரானுக்கு எதிராக விதிக்கப்பட்ட நான்காவது சுற்றுத் தடைகளுக்கு அந்நாடு ஆதரவளித்திருந்த மை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈரான் அணுவாயுத உற் பத்தி முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக அமெ ரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஏற்க னவே வலியுறுத்தி வரும் அதேவேளை சக்தி வளப் பயன்பாட்டு நோக்கத்திற்காக அணு சக்தி பயன்படுத்தப்பட்டு வருவதாக ஈரான் அறிவித்துள்ளது. (6)

# மாவோயிஸ்டுகள் பரிந்துரைத்த புதிய அமைதித் திட்டம் நிராகரிப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் பரிந்து ரைத்த புதிய அமைதித் திட்டத்தை நேபாள காங்கிரஸ் மற்றும் நேபாள கம்யூனிஸ்ட் கட் சிகள் நிராகரித்துள்ளன.

நேபாளத்தில் புதிய அரசியல் சாசன சட் டத்தை வடிவமைக்க இன்னும் 11 மாதகால அவகாசமே உள்ள நிலையில் மாவோயிஸ் டுகள் கட்சிக்கும் பிற அரசியல் கட்சிக்கும் இடையே கருத்தொற்றுமை ஏற்படுவதில் தொடர்ந்து சிக்கல் நீடிக்கிறது.

காத்மண்டுவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாவோயிஸ்டு கட்சித் துணைத் தலைவர் நாராயண் காஜி சிரஸ்தா புதிய அமைதி ஒப்பந் தத்தை முக்கியக் கட்சிகளான நேபாள காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கட்சிகளின் முன் வைத்தார்.

இந்தத் திட்டத்தில் நிச்சயமில்லாத பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. 2006 ஆம் ஆண்டில் மாவோயிஸ்டுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு எதிராக விடயங்கள் உள்ளன என்று கூறி அக்கட்சிகள் அமைதித் திட்டத்தை நிராகரித்துவிட்டன.

மாவோயிஸ்டுகளின் மக்கள் விடுதலை இராணுவம் என்ற படையே இப்போதும் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தி வருகிறது. மாவோயிஸ்டுகளின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தப் படையைக் கலைக்க அவர்கள் பல நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

இதனை நிராகரித்துள்ள முக்கிய அரசி யல் கட்சிகள் மாவோயிஸ்டுகள் அபகரித்து வைத்துள்ள சொத்துகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத் துகின்றன. (6-4)

# ஜப்பானில் ஆளும் கூட்டணிக்கட்சி மேல்சபைத் தேர்தலில் தோல்வி

(டோக்கியோ)

ஜப்பான் மேல் சபைத் தேர்தலில் ஆளும் இடதுசாரிகள் கூட்டணி பெரும்பான்மையை இழந்துள்ளதால் அரசு கவிழும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் பிரதமராக பதவியேற்ற நடோகானின் ஆளும் கூட்டணி கீழ்சபை யில் பெரும்பான்மை பலத்துடன் அரசு உட னடியாக கவிழ்வதற்கான வாய்ப்பு இல்லை என்றும் அதில் தெரியவந்துள்ளது. ஆனால் முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றுவதில் சிக்கல் உருவாகலாம் எனவும் தெரிகிறது.

ஆயினும் கூட்டணியில் வேறு சில கட்சிக ளைச் சேர்த்துக் கொண்டால் அரசு கவிழும் வாய்ப்பை தவிர்க்கலாம் எனத் தெரிகிறது. இவ் மேல்சபைத் தேர்தல் முடிவுகளால் சீர்திருத்த் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-4)

# பாகிஸ்தானில் இந்துக்கள் மீதான தாக்குதலில் 7 பேர் படுகாயம்

பாகிஸ்தானில் இந்துக்கள் குறைவாக உள்ளனர். இந்த நிலையில் பாகிஸ்தானின் தெற்கு பகுதியில் உள்ள சிந்து மாகாணத்தில் கராச்சியில் மேமன் கோத் என்ற இடம் உள்ளது. இது மலைகள் நிறைந்த பகுதி யாகும்.

அங்குள்ள மசூதியின் முன்பு வைக்கப் பட்டிருந்த குளிர்சாதன பெட்டியில் இருந்து தினேஷ் என்ற சிறுவன் தண்ணீர் குடித்தான். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த மலைவாழ் மக்கள் அவனை அடித்து உதைத்தனர்.

மேலும் அப்பகுதியில் தங்கியுள்ள இந்து குடும்பத்தினரையும் அவர்களது வீடுகளை யும் தாக்கி சேதப்படுத்தினர். இதில் 7 பேர் படுகாயம் அடைந்தனர். மேலும் அப்பகு தியை சேர்ந்த 60 இந்துக்களை அவர்களின் வீடுகளை விட்டு வெளியேற்றிவிட்டனர்.

தற்போது அவர்கள் அந்த ஊரின் ஒதுக் குப்புறம் உள்ள மாட்டுக் கொட்டகையில் தங் கியுள்ளனர். அப்பகுதியில் உள்ள 400 இந்து குடும்பங்களையும் வெளியேறும் படி மிரட்டி வருவதாக அங்கு வாழ்பவர்கள் தெரிவித்துள் ளனர். இதனால் பெரும் பீதியில் இவர்கள் காணப்படுகின்றனர்.


இச்சம்பவம் குறித்து பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பினரையும் அழைத்து பொலிஸார் விசாரணை நடத்தி வரு கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# இளவரசர் சார்ள்ஸை சந்திக்க போப்பாண்டவர் மறுப்பு

(லண்டன்)

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலை வரான போப் ஆண்டவர் பெனடிக்ட் முதன் முறையாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இங் கிலாந்து வரவுள்ளார். அங்கு இவர் எடின்பர்க் நகரில் உள்ள ஹோலிரூட் இல்லத்தில் தங்குவதோடு, அவர் இங்கிலாந்து ராணி எலிசபெத், அவரது கணவர் பிலிப் ஆகி யோரை சந்திக்கவுள்ளார்.

அதே நேரத்தில் அடுத்து அரசராக முடி சூட இருக்கும் இளவரசர் சார்ள்சை தனியாக சந்திக்க போப் ஆண்டவர் பெனடிக்ட் மறுத்து விட்டதாகவும் தான் பலரை சந்திக்க இருப்பதால் அவரை தனியாக



சந்திக்க நேரமில் லையெனவும் மிகவும் வேலைப்பளு கூடிய கால அட்ட வணை தயாரிக்கப்பட்டுள்ளது என்று தெரி வித்து விட்டாராம்.

இந்த தகவல் இங்கிலாந்து பத்திரிகை யில் வெளியிடப்பட்டுள்ளதாக அறியப்படு கிறது. (6)



கியூபாவின் தலைநகர் ஹவானாவில் நடைபெற்ற தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி கழக விழாவில் கலந்து கொண்ட கியூபா நாட்டுத் தலைவர் பிடல் காஸ்ரோ வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

# தர்சிகாவின் மரணம் தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன

## விளக்கமளித்து சுகாதாரப் பணிப்பாளர் கடிதம்



(யாழ்ப்பாணம்)

குடும்பநல உத்தியோகத்தர் ச.தர்சிகாவின் மரணம் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

குடும்பநல உத்தியோகத்தர்கள்சங்கம் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் தெரிவித்துள்ளதாக அவர்களுக்கு அனுப்பி வைத்த கடிதம்அப்படியே இங்கு பிரசுரமாகிறது.

தர்சிகாவின் மரணம் தொடர்பான பணிப்புறக்கணிப்பு தங்களது 13.07.2010 திகதியிடப்பட்ட மேற்படி விடயம் சம்பந்தமாக எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகின்றேன்.

* இம் மரணத்தில் சம்பந்தப்பட்ட வைத்தியரை உடனடியாக நீதி விசாரணைக்கு உட்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கனம் மாவட்ட நீதிபதி, ஊர்காவற்றுறை அவர்களுடன் நேற்றும், நேற்று முன்தினமும் தொடர்பு கொண்டு தெரிவித்திருந்தேன் இன்று (நேற்று) காலையிலும் தங்களது பணிப்புறக்கணிப்பு சம்பந்தமாக இவ் விசாரணையை துரிதப்படுத்துமாறு தகவல் தெரிவித்திருந்தேன்.

அதன் அடிப்படையில் அவர் சற்றுமுன் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு உடனடியாக பணிப்புரை வழங்குவதாக என்னிடம் தெரிவித்துள்ளார்.

* திணைக்கள மட்ட விசாரணைகள் டாக்டர் கே.ரி.சிவபாதம், டாக்டர் எஸ்.சிவராணி மற்றும் ஜெயவசீகரன் ஆகியோர் கொண்ட மூவர் குழுவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேலணை வைத்தியசாலையில் சம்பந்தப்பட்ட 8 உத்தியோகத்தர்களிடம் விசாரணைகள் நடைபெற்றன. இதில் சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்களிடமும் வைத்திய அதிகாரியிடமும் தொடர்ந்தும் விசாரணை நடைபெறும்.

இவ் விசாரணையின் அடிப்படையில் குற்றம் இழைக்கப்பட்டவர்களுக்கு எதிராக திணைக்கள நடவடிக்கை எடுக்கப்படும்.

* இவ் விசாரணையில் அன்று கடமையில் இருந்த ஊழியர்கள் யாராவது தவறிழைத்திருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

* பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு திணைக்கள நடைமுறைகளுக்கு ஏற்ப வழங்கக் கூடிய நட்டஈடு ஏற்பாடு இருப்பின் அதை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* குடும்பநல உத்தியோகஸ்தர்கள் இரவு கடமை செய்வதற்கு பாதுகாப்பு இல்லை என்று கருதும் இடங்களை எமக்கு அறியத் தந்தால் அங்கு இரவு கடமை புரிய வற்புறுத்தமாட்டோம்.

பாதுகாப்பு பிரச்சினையுள்ள இடங்களில் கடமைப்பிரதேசத்தில் இருக்கும் படி வற்புறுத்தப்படமாட்டாது.

* தங்களது உத்தியோகத்தர்களுக்கு வைத்தியர்களினால் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் அதனை உடனடியாக எங்களது கவனத்துக்கு கொண்டுவரவும்.


எழுத்து மூல மாக அறிவிக்க தங்களுக்கு தயக்கம் இருந் தால் வாய்மூலமாக தங்களது பணிமனையில் மேற்பார்வை உத்தியோகத்தர் ஊடாக எமக்கு அறியத்தரவும்.

* காலஞ்சென்ற உத்தியோகத்தருக்கு திணைக்கள நிதியியல் சட்டங்களுக்கு அமைவாக வழங்கக் கூடிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இப்பணி புறக்கணிப்பில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக எவ்வித பழிவாங்கல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றுள்ளது. (ச)

# காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை வேறு நாட்டிற்கு வழங்கப்பட மாட்டாது

## கைத்தொழில் அமைச்சர் உறுதியளிப்பு



காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு நாட்டிற்கோ அன்றி தனியாருக்கோ வழங்கப்படமாட்டாது. வெகு விரைவில் சீமெந்து தொழிற்சாலையை இயக்க நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என அரச சொத்துடமைகள் மற்றும் கைத்தொழில் அமைச்சர் பி.தயாரட்ண தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அரச சொத்துக்கள் மற்றும் கைத் தொழில் அமைச்சர் பி.தயாரட்ண, பிரதி அமைச்சர் சுரத் குணரட்ண மற்றும் அமைச்சின் செயலாளர் வினிகமகே, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா சீமெந்து லிமிட்டெட்டின் தலைவர் சிசிலபரணகம ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் யாழ். அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, சீமெந்து தொழிற்சாலையை கட்டம் கட்ட மாக இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. கடந்த பல வருடங்களாக இந்த தொழிற்சாலை படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது இந்நிலைமை உடனடியாக மாற்றப்படும்.

கடந்த காலத்தில் இந்தத் தொழிற்சாலை இந்தியாவுக்கு விற்கப்பட்டதாக கூறப்படுகின் றது. இது உண்மைக்குப் புறம்பான தகவலாகும். எந்த சந்தர்ப்பத்திலும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை இந்தியாவுக்கே அல்ல எந்தவொரு நாட்டிற்கோ வழங்கப் போவதில்லை.

அடுத்துவரும் சந்ததியும் கூட இதனைப் பயன்படுத்த வேண்டும் தற்போது. கூட தொழிற் சாலையில் உள்ள இயந்திரங்கள் பாவிக்கப்படாவிட்டாலும் இயக்கக் கூடிய நிலையில் உள்ளன.

தற்போது சீமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் இருந்து கற்கள் எடுக்கும் செயல்பாடுகள் கடந்த வாரம் முதல் நிறுத்தப்பட்டுள்ளன. கற்கள் எடுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிடங்குகளுக்கு முருங்கனில் இருந்து மண்கொண்டு வரப்பட அந்த பகுதிகள் நிரப்பப்படுவதுடன் அந்தப் பகுதி ஒரு விவசாயப் பயன்பாட்டிற்கு உட்பட்ட பகுதியாகவும் மாற்றப்படும்.

மேலும் சீமெந்து மொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் சுமார் 7 ஆயிரத்து 77 ஏக்கர் காணியும் சீமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள அயல் பகுதிகளில் 365 ஏக் கர் காணியும் பயன்பாட்டிற்கு உரியதாக காணப்படுகின்றது.

கட்டம் கட்டமாக தொழிற்சாலை இயங்கத் தொடங்கும் போது முதல் கட்டமாக வெளியில் இருந்து எடுத்துவரப்படும் சீமெந்து பொதி செய்யும் செயல்பாடுடன் ஆரம்பமாகி இரண்டாம் கட்டமாக இந்தப் பகுதியில் உற்பத்தியை மேற்கொள்வதற்கு வேண்டிய செயல்பாடுகளை பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளப்படும்.

இதே போன்ற தற்போது முழுமையாக சேதம் அடைந்துள்ள பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையையும் இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனைக் கூட அரசாங்கமே மேற்கொள்ளும். தனியார்கள் இதனை இயக்க விரும்பினாலும் கூட யாரிடமும் அரசாங்கம் கையளிக்க மாட்டாது இது 2500 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்படு கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# தனிமையிலிருந்த இளம் பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

## உடுப்பிட்டியில் கொடூரம்

உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் தனியாக வசித்துவந்த இளம் பெண் ஒருவர் அடி காயங்களுடன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரின் வீட்டிலிருந்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன. இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவகுருநாதன் ஜெயகௌரி (வயது 40) என் பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, உடுப்பிட்டிப் பகுதியில் தனிமையில் வசித்து வந்த யுவதியைக் கொலை செய்து விட்டு அவரிடமிருந்த பல இலட்சம் ரூபாய் நகைகள், வீட்டிலிருந்த பெறுமதி மிக்க உபகரணங்கள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

மேற்படி வீட்டில் தனிமையில் வசித்த வந்துள்ள இவரை அவரது உறவினர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் சந்தித்து விட்டுச் சென்றுள்ளனர்.

பின் இவரை காணாத நிலையில் வீட்டினை சல்லடை போட்டு தேடினர். அதன் போது சடலம் கிணற்றினுள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து நேற்று பகல் 11 மணிக்கு சம்பவ இடத்துக்கு சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார் சடலத்தை மீட்டனர். விசாரணையை பருத்தித்துறை நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டனர். இக் கொலைச் சம்பவத்தினை யடுத்து வடமராட்சிப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ச-3,24)

# கணேஷை முன்மாதிரியாகக் கொண்டு...

எனக்கு அரச அதிபர் சேவை கிடைப்ப தற்குக் கணேஷ் அவர்களே சிபார்சு செய்திருந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 8 வருடங்களில் சுனாமி மற்றும் போர்ச் சூழலால் பாதிப்படைந்த 7 ஆயிரம் குடும்பங்களுக்குப் புதிதாக வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளேன்.

மிகவும் கடினமான சூழலில் முல்லைத் தீவு மாவட்டத்தில் கடமையாற்றியுள்ளேன். சுனாமி உட்பட மூன்று தடவைகள் உயிர் ஆபத்திலிருந்து தப்பியுள்ளேன்.

இதுவரை அரச சேவையில் 8 அரச அதிபர்களின் கீழ் கடமையாற்றியுள்ளேன். அதிலும் எனக்குக் குருவாக இருந்து நிர்வாகம் தொடர்பாகப் பல ஆலோசனைகளைக் கணேஷ் அவர்கள் வழங்கியுள்ளார்.

அத்துடன் கணேஷ் அவர்களை எனது தந்தையாகத்தான் நல்லுறவைப் பேணினேன். எனக்கும் கணேஷ் அவர்களுக்கும் இடையே எவ்விதமான மனக்கசப்பும் ஏற்பட் டதில்லை.

கடந்த முதலாம் திகதிக்குப் பின்னர் ஊட கங்கள் எமக்கிடையே ஒரு மோதல் போன்று செய்திகளை வெளியிட்டன.

அவ்வாறு எம்மிடையே மோதல் ஏற்பட வில்லை. பத்திரிகைகள் உண்மையை உண்மையாக எழுத வேண்டும். எனவே ஊடகங்கள் இல்லாத பிரச்சினையை உருவாக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபராகக் கடமையாற்றி நேற்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் க. கணேஷ் அவர்கள் உரையாற்றுகையில்,

18-வது வயதில் அரச சேவையில் இணைந்து 50 வருடங்கள் பணி புரிந்துள்ளேன். அதில் கடந்த 20 வருடங்கள் (1991. 06.20 ஆம் திகதி முதல்) அரச அதிபராக மக்களுக்குத் திருப்தியான வகையில் சேவை யாற்றியுள்ளேன்.

அத்துடன் எனது அரச அதிபர் பதவிக் காலம் கஷ்டமான காலங்களாகும். எனினும் இதய சுத்தியுடனும் வெளிப்படைத் தன்மை யுடனும் இறை நம்பிக்கையுடனும் கடமையாற்றியமையினால் அனைத்துத்தரப்பினரும் எனது சேவைகளை ஏற்றுக்கொண்டனர்.

மாவட்டத்திலுள்ள அனைவரினதும் ஒத்தழைப்புடன் மட்டுமே நிர்வாகத்தைச் சீராக நடத்த முடியும். அர்ப்பணிப்புடனும் மிகுந்த திருப்தி யுடனும் அனைத்து உத்தியோகத்தர்களும் இணைந்து குடும்பமாகச் செயற்படும் போதுதான் நல்லாட்சியை நடத்த முடியும்.

எனவே புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் எனது சேவையின் போது ஒத்துழைத்த பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப் பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஊடகங்கள், இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன் என்றார். (ச-5)

## இலங்கை...

னும் இந்தக் குற்றச்சாட்டுக்களை இலங்கைக் கடற்படையினர் முற்று முழுதாக நிராகரிக்கின்றனர்.

இதேவேளை யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகள் தாமாகவே சுயவிருப்பில் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக இந்தியாவுக்கான இலங்கைப் பிரதி உயர்ஸ்தானிகர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (ச-5)

## சுகாதார...

இடம்பெற்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் கறுப்புப் பட்டி அணிந்திருந்ததுடன் சக ஊழியரின் இழப்பினால் கதறியழுத வண்ணம் இருந்தனர்.

அத்துடன் விசாரணைகளைத் துரிதப்படுத்தல், மரணமான தர்சிகாவின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு வழங்கல், குடும்பநல உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் போன்ற கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸ் மற்றும் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் ஆகியோர் ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்தித்து விசாரணைகளைத் துரிதப்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ச-5)

# ஐ.தே.க.-அரச தரப்பினர் நேற்றும் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியின் பிரதிநிதிக் குழுவொன்று நேற்றைய தினமும் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் அரசாங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதாக ஐக்கியதேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டு தரப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய நேற்று மீண்டும் கூடி கலந்துரையாடியதாக அவர் நேற்றுக் கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைகளில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டால் அதன்படி எவ்வாறு பிரதிநிதித்துவத்தை மீள தயார் படுத்திக் கொள்வது என்பது குறித்தே நேற்று மாலை இடம்பெற்ற இருதரப்பு சந்திப்பில் ஆராயப்பட்டதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். (ச-5)

## வடக்கில் நிரந்தர இராணுவ...

வவுனியா, மடு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அந்தப் பிரதேசங்களில் தீவிரவாதம் மீண்டும் தலையெடுக்காத வண்ணம் பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வெள்ளாங்குளம் இராணுவ முகாமுக்குச் சென்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அங்கு கூடியிருந்த இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றினார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் நிரந்தரமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்காக வசதிகளுடன் கூடிய இராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 30 வருடங்களாக நாட்டில் நிலவிய பயங்கரவாதமும் போர்ச் சூழலும் அரச படைகளின் பெரும் தியாகத்தினால் ஒழிக்கப்பட்டிருக்கின்றன.

இப்போது அமைதியும் சமாதானமும் நிலவுகின்றது. பெரும் தியாகங்களின் மூலம் எட்டப்பட்டுள்ள இந்த அமைதியையும் சுதந்திரத்தையும் நீண்ட காலத்திற்குப் பேணி பாதுகாக்க வேண்டியிருக்கின்றது.

காடுகள் அடர்ந்து மிகவும் பின்தங்கிய பிரதேசமாக விளங்கிய இந்தப் பகுதிகளில் தான் விடுதலைப்புலிகள் தமது பயிற்சி முகாம்களை அமைத்துப் பயிற்சி வழங்கி பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். அந்த நிலைமை மீண்டும் ஏற்படாத வகையில் நாட்டின் பாதுகாப்பை நாம் உறுதி செய்ய வேண்டும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறினார். (ச-5)

## டாக்டர்...

தொடர்பிலான விசாரணை நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஆர்.வசந்தசேனன் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இதன் போது மரணமடைந்த குடும்பநல உத்தியோகத்தர் சரவணை தர்சிகாவின் சகோதரி, வேலணை வைத்தியசாலையில் கடமையாற்றிய தாதி உத்தியோகத்தர் மற்றும் சம்பவ தினத்தன்று சடலம் மீட்கப்பட்ட அறைக் கதவினை உடைத்தவர் ஆகியோரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது.

இதன் பிரகாரம் குடும்ப நல உத்தியோகத்தர் தர்சிகாவின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாகவும் அதனால் வேலணை வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் பிரியந்த செனவிரட்னவை கைது செய்து நாளை (இன்று) நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதவான் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் மரணமடைந்த தர்சிகாவின் பிரேத பரிசோதனை அறிக்கையை இன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் தவறின் யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியினால் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஆர்.வசந்தசேனன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## யாழ்ப்பாண...

றிய திருமதி இமெல்டா சுகுமாருக்கு இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டது.

எனினும் இந்த நியமனத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்த பொதுநிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு மறு அறிவித்தல் வரை யாழ்.மாவட்ட அரச அதிபராகக் க. கணேஷ் கடமையாற்றுவார் என அறிவித்தது.

இந் நிலையில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் விசேட அறிவித்தலுக்கமைய யாழ்.மாவட்ட அரச அதிபராகத் திருமதி இமெல்டா சுகுமார் பதவியைப் பொறுப்பேற்றார்.

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு நேற்று நண்பகல் வருகை தந்த திருமதி இமெல்டா சுகுமார் பிற்பகல் 2.20 மணிக்கு யாழ். அரச அதிபராக இருந்த க.கணேஷிடமிருந்து தமது பதவியைப் பொறுப்பேற்றார்.

இந் நிலையில் அரச சேவையில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்து,

அதில் 20 வருடங்கள் வட மாகாணத்தின் மூன்று மாவட்டங்களின் அரச அதிபராகக் கடமையாற்றிய க. கணேஷ் நேற்றுடன் ஓய்வு பெற்றார். (ச-5)


மற்றுமொரு புதிய ஆரம்பம்
இப்பொழுது கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் உங்களது சேவையினை வழங்க...
திருமுருகன் கொம் நெற்
கடந்த 10 ஆண்டுகளாக யாழ் மக்களுக்கு சேவையாற்றி வருகின்ற எமது நிறுவனம் கிளிநொச்சியிலும் - வவுனியாவிலும் எமது கிளை நிறுவனங்களை திறந்து வைப்பதில் மிகவும் பெருமகிழ்வடைகின்றது.
துரித தபால்கள், பொதிகள் சேவை
DHL WORLDWIDE EXPRESS
EPSON EXCEED YOUR VISION
D-Link Building Networks for People
Debug Authorized Distributor in North
புதுக்கடைத் திறப்பு விழா
எமது கிளை ஸ்தாபனங்களான இல. 44, மில் றோட், வவுனியாவில் 14.07.2010 புதன்கிழமை 9.00 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சுபவேளையிலும் இல. 05, திருநகர், பிரதான வீதி, கிளிநொச்சியில் 15.07.2010 வியாழக்கிழமை அதே சுபநேரத்திலும்
LH. PIRABATH NIROSHAN
Assistant General Manager
Debug
அவர்களினால் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது. இதுவரை காலமும் எமது ஒவ்வொரு வெற்றியிலும் பங்காற்றிய எமது வாடிக்கையாளர்களுக்கு நெஞ்சம் நெகிழ நன்றியைத் தெரிவிப்பதோடு தொடர்ந்து எமது நிறுவனத்திற்கு பங்காற்றி மேன்மேலும் வளர்ச்சி பெற தங்கள் ஆதரவினை வேண்டி நிற்கின்றோம்.
நிர்வாகத்தினர்.
(C-64)



A/L - 2012
புவியியல்-N.BABU
| மதுரம் - கோப்பாய் | பிற்ஸ்மன்-மானிப்பாய் | C.C.A. - சுண்ணாகம் |
|---|---|---|
| திங்கள், புதன் 5 pm | சனி, ஞாயிறு 3 pm | சனி, ஞாயிறு 6.15 am |

❖ புதிய மாணவர்களுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (1854)



July 16 முதல் நெல்லியடி நகரில்
ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English பயிற்சிமையம்.
நவீன நுட்பங்களுடன் ஆங்கிலம் பேச பயிலலாம்.
veta® Experts in English Training
An ISO 9001:2000 Certified Company
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
நெல்லியடி
Tue, Thu 9.00 a.m.
Sat, Sun 3.00 p.m.
Mon, Wed, fri 5.00 p.m.
யாழ்ப்பாணம்
Sat, Sun 9.00 a.m.
Mon, Wed 4.30 p.m.


DMI COMPUTER EDUCATION
M.M.V. வீதி, நெல்லியடி. (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக)
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்பாணம். Tel. : 021-222 4403
(C-645)



Mr. Concrete
For all your concrete needs!
SLSI - தரத்திற்கு அமைய நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை.
உங்கள் சகல கொங்கிறீட் தேவைகளுக்கும்
- Concrete Blocks
- Concrete Hollow Blocks
- Columns
- Lintels
- Paving Stones
இலவச விநியோகம்

Sales Office: 124, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் www.MrConcrete.lk
Factory: கொடிகாமம் வீதி, புலோலி. Tel: 0217 222 333
(1850)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.